# வருடாந்த அறிக்கை
# 2017

**அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப நிறுவகம்**

**தலைமை அலுவலகம்**
இலக்கம் 08, பத்தரமுல்ல வீதி, எத்துள்கோட்டே,
ஸ்ரீ லங்கா
தொலைபேசி: +94-11-2887889
தொலைநகல்: +94-11-2866846

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்**
ஜயந்தி மாவத்தை, அனுராதபுரம்
ஸ்ரீ லங்கா
தொலைபேசி: +94-25-3230004
தொலைநகல்: +94-25-2223983

இணையத்தள முகவரி: www.ipht.lk

அறுவடைக்கு பிந்திய தொழிநுட்ப நிறுவனம்,
இல.28, பத்தரமுல்ல வீதி, அத்துள் கோட்டே,

கௌரவ விவசாய அமைச்சர்,
கமத்தொழில் அமைச்சு,
இல.288, ஸ்ரீஜெயவர்த்தனபுர மாவத்த,
இராஜகிரிய .

கௌரவ அமைச்சர் அவர்கள்,

ஆண்டறிக்கை-2017

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) பந்தியின் பிரகாரம், 2017ஆம் ஆண்டிற்கான அறுவடைக்கு பிந்திய தொழிநுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களை உங்களிடம் கௌரவத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

இப்படிக்கு உண்மையுள்ள,

காவிந்த திசாநாயக்க,
தலைவர்,
அறுவடைக்கு பிந்திய தொழிநுட்ப நிறுவனம்,

## சட்டமும் சட்டவாக்கங்களும்

கமத்தொழில் அமைச்சின் கீழ் இயங்குகின்ற அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப நிறுவகம் சகல விவசாய பயிர்களுக்குமான அறுவடைக்கு பிற்பட்டகால ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கத்தின் நிமித்தம், 1137/10 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு அரசாங்கத்தின் அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் 2000 ஆம் ஆண்டு யூன் 19 ஆம் திகதி தாபிக்கப்பட்டது.

புதிதாக தாபிக்கப்பட்ட இந்த நிறுவகம் 1976 ஆம் ஆண்டில் FAO/UNDP உதவியுடன் அனுராதபுரத்தில் அமைக்கப்பட்ட நெல் சந்தைப்படுத்தல் சபையினது அரிசி பதனிடும் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் (RPRDC) தொழிற்பாடுகளை பொறுப்பேற்றுள்ளது. இந்த புதிய நிறுவகத்திற்கு அறுவடைக்கு பிற்பட்டகால ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி விடயங்கள் மட்டுமன்றி ஏனைய வயல் பயிர்கள், மரக்கறிப் பயிர்கள், வாசனைப் பயிர்கள் மற்றும் வெட்டுப் பூந்தாவரங்கள் என்பன தொடர்பான தொழிற்பாடுகளும் மற்றும் பொறுப்புகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### அதிகாரம்

வர்த்தமானி அறிவித்தலினால் உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க, அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப நிறுவகம் இலங்கையில் அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப அபிவிருத்தியின் நிமித்தம் ஆராய்ச்சித் தேவைகளை இனங்கண்டு முந்துரிமை அளிக்கும் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தும் நோக்கத்திற்காக சம்பந்தப்பட்ட சகல முகவர்நிலையங்களையும் ஒன்றிணைப்பதற்கான ஒருங்கிணைப்பு சபையாக தொழிற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**தூரநோக்கு**

தேசிய உணவு பாதுகாப்பின் நிமித்தம் அறுவடைக்கு பிற்பட்டகால நிலையான அபிவிருத்தியில் சிறப்பு வாய்ந்த நிலையமாக விளங்குதல்.

**செயற்பணி**

போட்டி விலையில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கு வசதியளிக்கும் வகையில் உணவு பாதுகாப்பு மற்றும் தரத்தில் உயர்ந்த உற்பத்திகள் மற்றும் விவசாய உற்பத்திகள் என்பவற்றின் விநியோக மற்றும் பெறுமான சங்கிலிகளை வலுப்படுத்துவதற்கான வினைத்திறன் வாய்ந்த மற்றும் பயனுள்ள அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப தலையீட்டு நடவடிக்கைகளினூடாக தேசிய உணவு பாதுகாப்பில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துதல்.

## முகாமைத்துவ சபை

**2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள விபரம்**

**தலைவர்**

கவிந்த சி. திஸாநாயக்க

**உப தலைவர்**

ஆர்.பி.ஏ. ரணவீர பத்திரன

**உறுப்பினர்கள்**

திரு நந்தகோபாலன்

திரு எஸ்.பி. குமார குணரட்ன

திரு டீ.பீ. சரத்

திரு எம்.எஸ். கருனாரத்ன

திரு ப்ரியந்த ஜயதிஸ்ஸ

**சபைக்கான செயலாளர்**

பொறியியலாளர் மஹேஸ் திஸாநாயக்க
*நிறுவகத்தின் பதில் பணிப்பாளர்*

## நிறுவன கட்டமைப்பு

## அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரமுள்ள (ஆ.சே.தி.) நிறுவன கட்டமைப்பு




இந்த நிறுவகம் தனது பிரிவுகளை 2016 ஆம் ஆண்டில் பின்வருமாறு மறுசீரமைத்துள்ளது. மொத்த நிறுவன கட்டமைப்பும் மற்றும் ஆளணியும் மறுசீரமைப்பு கட்டத்திலுள்ளன.

1. ஆராய்ச்சிப் பிரிவு
2. பொறியியல் சேவைகள் பிரிவு
3. விரிவாக்கல் பிரிவு
4. ஆய்வுகூட சேவைகள் பிரிவு
5. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு
6. அபிவிருத்தி கருத்திட்டப் பிரிவு
7. நிருவாகப் பிரிவு
8. நிதிப் பிரிவு
9. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
10. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

## சிரேஷ்ட முகாமைத்துவம்

**2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள விபரம்**

**பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்**
**பொறியியலாளர் மஹேஸ் திஸாநாயக்க**

**மேலதிக பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றல்)**
**பொறியலாளர் எச்.எம்.ஏ.பி. ரத்நாயக்க**

**மேலதிக பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் நிதி)**
**திரு ஆர்.ஏ.கே.பி. ராமநாயக்க**

**ஆராய்ச்சிப் பிரிவு**
கலாநிதி (திருமதி) நிலந்தி விஜேவர்த்தன
பி.த.|பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர்

**பொறியியல் சேவைகள் பிரிவு**
பொறியியலாளர் பீ.டீ.எம்.பி. பண்டார
பி.த.|எந்திர பொறியியலாளர்

**விரிவாக்கல் பிரிவு**
திருமதி சாமிந்தி திஸாநாயக்க
பி.த.|சிரேஷ்ட விரிவாக்கல் உத்தியோகத்தர்

**ஆய்வுகூட சேவைகள் பிரிவு**
திரு சமிந்த குணவர்த்தன
பி.த.|ஆராய்ச்சி உத்தியோகத்தர்

**அபிவிருத்தி கருத்திட்டப் பிரிவு**
திரு டப்ளியூ.எம்.சி.பீ. வாசல
பி.த.|சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்

**திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு**
திருமதி ருவன்கா ரத்நாயக்க
பி.த.|ஆராய்ச்சி உத்தியோகத்தர்

**நிருவாகப் பிரிவு**
திரு ஆர்.ஏ.கே.பி. ராமநாயக்க
பி.த.|மேலதிக பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் நிதி)

**நிதிப் பிரிவு**
திரு நிலூகா இலங்கசிங்க
பி.த.|கணக்காளர்

**தகவல் தொழில்நுட்ப பிரிவு**
பொறியியலாளர் (திருமதி) டீ.எம்.எஸ்.பி. பண்டார
பி.த.|எந்திர பொறியியலாளர்

**கணக்காய்வு பிரிவு**
திரு ஆர்.எம்.டீ. ரத்நாயக்க
பி.த.|உள்ளக கணக்காய்வாளர்

## முகாமைத்துவக் குழுக்கள்

### 2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் உறுப்பினர் பற்றிய விபரம்

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| பெயர் | பதவி |
|---|---|
| திருமதி இனோகா லங்காதிலக்க | தலைவர் |
| திரு ஆர்.பி.ஏ. ரணவீர பத்திரன | உறுப்பினர் |
| திரு டீ.பீ. சரத் | உறுப்பினர் |
| பொறியியலாளர் மஹேஸ் திஸாநாயக்க | செயலாளர் |
| திரு ஆர்.எம்.டீ. ரத்நாயக்க | ஏற்பாட்டாளர் |
| திரு ஜே.ஏ.எஸ். தம்மிக்க பெரேரா | அவதானிப்பாளர் |
| திரு நாமரத்ன | அவதானிப்பாளர் |

### நிருவாகக் குழு

| பெயர் | பதவி |
|---|---|
| திரு கே.டப்ளியூ.இ. கறலியத்த | தலைவர் |
| மேலதிகப் பணிப்பாளர் (A மற்றும் F) | செயலாளர் |
| பணிப்பாளர் | உறுப்பினர் |
| நிருவாக உத்தியோகத்தர் | உறுப்பினர் |

### நிதிக் குழு

| பெயர் | பதவி |
|---|---|
| திரு எம்.எஸ். கருனாரத்ன | தலைவர் |
| பி.த./நிதி | செயலாளர் |
| மேலதிகப் பணிப்பாளர் (A மற்றும் F) | செயலாளர் |

### சட்டப் பிரிவுக் குழு

| பெயர் | பதவி |
|---|---|
| திரு எஸ்.பி.கே. குணரத்ன | தலைவர் |
| மேலதிகப் பணிப்பாளர் (A மற்றும் F) | செயலாளர் |
| பணிப்பாளர் | உறுப்பினர் |

### வருமான அபிவிருத்திக் குழு

| பெயர் | பதவி |
|---|---|
| திரு ப்ரியந்த ஜயதிஸ்ஸ | தலைவர் |
| பி.த./அபிவிருத்தி கருத்திட்டம் | செயலாளர் |
| மேலதிக பணிப்பாளர் (A மற்றும் F) | உறுப்பினர் |
| மேலதிகப் பணிப்பாளர் (R மற்றும் TT) | உறுப்பினர் |
| பி.த./விரிவாக்கல் | உறுப்பினர் |

| | |
|---|---|
| பி.த./பொறியியல் சேவை | உறுப்பினர் |
| பி.த./ஆய்வுகூட சேவை | உறுப்பினர் |
| பி.த./திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு | உறுப்பினர் |

## அபிவிருத்திக் கருத்திட்டக் குழு

| **பெயர்** | **பதவி** |
|---|---|
| திரு டீ.பீ. சரத் | தலைவர் |
| பி.த./திட்டமிடல் மற்றும் கண்காணித்தல் | செயலாளர் |
| பி.த./விரிவாக்கல் | உறுப்பினர் |
| பி.த./அபிவிருத்தி கருத்திட்டம் | உறுப்பினர் |

## ஆராய்ச்சி வெளியீட்டுக் குழு

| **பெயர்** | **பதவி** |
|---|---|
| மேலதிகப் பணிப்பாளர் (R, TT) | தலைவர் |
| பி.த./விரிவாக்கல் | செயலாளர் |
| பி.த./ஆராய்ச்சி | உறுப்பினர் |
| பி.த./பொறியியல் சேவை | உறுப்பினர் |
| பி.த./திட்டமிடல் மற்றும் கண்காணித்தல் | உறுப்பினர் |

## தலைவரின் செய்தி



அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப நிறுவகம் (அ.பி.தொ.நி.) கமத்தொழில் அமைச்சின் கீழ் இயங்குகின்ற இலங்கையிலுள்ள தேசிய நிறுவகமாகும். நாட்டில் உணவு பாதுகாப்பை மேம்படுத்தும் குறிக்கோளுடன் இந்த நிறுவகத்தின் செயற்பாடுகளினால் அறுவடைக்கு பின்-கைத்தொழிலின் சகல பிரிவுகளும் அடையாளப்படுத்தப்படுகின்றன. இந்த நிறுவகம் நவதானியங்கள், பருப்பு வகை தானியங்கள், எண்ணெய் தரும் விதைகள், ஏனைய வயல் பயிர்கள், பழ வர்க்கங்கள், மரக்கறி வகைகள், வாசனைப் பயிர்கள், அலங்கார தாவரங்கள் மற்றும் வெட்டு பூந்தாவரங்கள் என்பன தொடர்பான அறுவடைக்கு பிற்பட்டகால ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கத்தின் நிமித்தம் 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபனங்கள் சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ், 1137/10 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் அதிவிஷேட வர்த்தமானி மூலம் 2000 ஆம் ஆண்டு யூன் 19 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. இந்த நிறுவகம் 1976 ஆம் ஆண்டில் FAO/UNDP உதவியுடன் அமைக்கப்பட்ட நெல் சந்தைப்படுத்தும் சபையின் அரிசி பதனிடும் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினது (RPRDC) தொழிற்பாடுகளை பொறுப்பேற்றது.

திட்டவட்டமான ஒரு காலப்பகுதிற்கு, பண்ணை வாயில் செயற்பாடுகளை நிலைப்படுத்துவதற்காகவும் மற்றும் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விவசாய நுகர்வுப் பொருட்களின் விநியோக சங்கிலிகளை மேம்படுத்துவதற்காகவும் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இந்த நிறுவகத்தினால் 16 ஆராய்ச்சி கருத்திட்டங்களும் 08 ஆராய்ச்சி அபிவிருத்தி கருத்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஒழுங்குறுத்தப்பட்ட அறுவடைக்கு பிற்பட்டகால விநியோக சங்கிலி முறைமைகளை ஆரம்பித்ததால், நன்மை பெறுநர்களின் வாழ்க்கை தரங்கள் கணிசமானளவு உயர்வடைந்துள்ளன. மாம்பழங்களை நுகர்கின்ற நுகர்வோருக்கு உத்தரவாத தரத்தையும் மற்றும் பாதுகாப்பையும் உறுதிசெய்கின்றதும் அதே நேரம் விவசாயிகளுக்கு மட்டுமன்றி விநியோக சங்கிலியில் சம்பந்தப்படுகின்ற பயிர்களை

பறிக்கும் தரப்புகள், விவசாய பொருட்களை சேகரிக்கும் தரப்புகள், ஏற்றியிறக்கும் தரப்புகள், பொதியிடும் நிலைய உரிமையாளர்கள், மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகள் போன்ற ஏனைய அக்கறையுடைய தரப்புகளுக்கும் அதிக வருமானத்தை உறுதிசெய்கின்ற செய்கின்றதுமான மற்றும் நியாய விலையில் நுகர்வோருக்கு தரத்தில் சிறந்த மாம்பழங்கள் விநியோகிக்கப்படுகின்ற 'ஓமாரகொல்ல மாம்பழங்களும்' மற்றும் 'பேராதெனிய மாம்பழங்களுமே' இந்த கருத்திட்டங்களுக்கு பின்னாலுள்ள இரண்டு வெற்றிகரமான கதா பாத்திரங்களாகும். இந்த கருத்திட்டங்களின் பயனாக, தரத்தில் சிறந்த மாம்பழங்கள் தற்பொழுது சந்தையில், நியாய விலையில் கிடைக்கக் கூடியதாகவுள்ளன. அதன் பின்னர், மற்றைய அதாவது கொய்யா, வாழை மற்றும் பபாயா ஆகிய ஏனைய மூன்று பழப் பயிர்களுக்கும் இந்த செயற்பாடுகளை விஸ்ரிக்கும் நிமித்தம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களின் நிமித்தம், கமத்தொழில் அமைச்சினூடாக மொத்தம் 70.4 மில்லியன் ரூபா நிதி கிடைத்தது. இவற்றில், 8 கருத்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டன. ஏனைய கருத்திட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இறுதியாக, இந்த கருத்திட்டங்களின் வெற்றியைக்கொண்டு அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளையும் மற்றும் வீனாதலையும் குறைப்பதற்கான இலக்கு, விநியோக மற்றும் பெறுமான சங்கிலிகளில் சம்பந்தப்படுகின்ற அக்கறையுடைய தரப்புகளின் வாழ்வாதாரம் மேம்படுவதற்கும் அதே நேரம் எதிர்காலத்தில் இயற்கை வளங்கள் மற்றும் சுற்றாடல் என்பவற்றில், விவசாய மற்றும் விவசாய கழிவுகளின் / இழப்புகளின் பாதகமான தாக்கங்களை குறைப்பதற்கும் வழிவகுக்கும்.

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில், இந்த நிறுவகம் எதிர்வரும் ஆண்டுகளில் அறுவடைக்கு பின்-கைத்தொழிலை மேம்படுத்தும் என நான் நம்புகின்றேன்.

**கவிந்த சி. திஸாநாயக்க**
தலைவர்

2017 ஆம் ஆண்டு இந்த நிறுவகத்திற்கு வெற்றிகரமான ஒரு ஆண்டாக விளங்குகின்றது. புதிய தலைவர் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் நியமிக்கப்பட்டார். அவரது புதிய தூரநோக்கில், இந்த நிறுவகம் இலங்கையில் விவசாய பயிர்களின் விநியோக மற்றும் பெறுமான சங்கிலி அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தியது. இந்த நிறுவகத்தின் சகல நான்கு பிரதான செயற்பாடுகளான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, விரிவாக்கல், பயிற்சி மற்றும் உசாதுணை மற்றும் ஏனைய சேவைகள் என்பன விநியோக மற்றும் பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகளின் மேம்பாட்டினால் நிரல்படுத்தப்பட்டன.

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி**

பதினைந்து (15) வருடங்களின் பின்னர், இந்த நிறுவகத்தினால் பத்து (10) ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், முப்பது (30) ஆராய்ச்சி கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு முதல் நிகழ்ந்து வருகின்ற பதினொரு (11) அத்தகைய ஆராய்ச்சி கருத்திட்டங்கள் இவற்றில் அடங்குகின்றன. 2016 ஆம் ஆண்டில் பதினேழு ஆராய்ச்சி கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவை தவிர, நான்கு (04) ஆராய்ச்சி கருத்திட்டங்கள் அரச மற்றும் தனியார் துறை கருத்திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டன. இவற்றுக்கு தனியார் துறையினால் நிதியிடப்பட்டது. இரண்டு (02) கருத்திட்டங்கள் NSF மற்றும் NRC ஆகியவற்றின் மானியத்தின் கீழ் வெளிவாரி ரீதியில் நிதியிடும் ஆராய்ச்சி கருத்திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன. மேலும் இரண்டு (02) கருத்திட்டங்கள் மாணவர் கருத்திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டன.

**புதிய உள்ளீடுகள்**

- விவசாய உணவுப் பொருட்களின் அறுவடைக்கு பிற்பட்டகால தரத்தை மேம்படுத்துவதற்கான சரியான மற்றும் புதிய தொழில்நுட்பங்கள்
- சந்தையில் தரத்தில் மேம்பட்ட பழங்கள் கிடைக்கும் தன்மையை அதிகரித்தல்
- நுகர்வோருக்கான தரத்தில் மேம்பட்ட உற்பத்திகளும் மற்றும் உற்பத்தித் தரப்புகளின் அதிகரித்த வருமானமும்





எலுமிச்சைகளின் பாவனை காலத்தை மேம்படுத்தும் நிமித்தம் அவற்றை மெழுகிட்டு பதனிடுதல்



ஈரளிப்பான நெல்லை உலர்த்தும்

புதிய உலர்த்தி முறைமை

**க்ரையொஜெனிக் அளவை குறைப்பதன் மூலம் மிளகாய் தூளின் தரத்தை மேம்படுத்துதல்**

## ஆக்கவுரிமைகள், வெளியீடுகள் மற்றும் விருதுகள்

- 'மரக்கறி கேக் கலவை' மற்றும் வாசனைப் பொருட்களை அரைப்பதற்கான 'நீராவி குளிராக்கி முறையியல்' என்பன தொடர்பில் இரண்டு ஆக்கவுரிமைகள் கிடைத்தன.
- சர்வதேச ஆராய்ச்சி வெளியீடுகளின் நிமித்தம் ஒரு ஜனாதிபதி விருது கிடைத்தது.
- இரண்டு ஆராய்ச்சி வெளியீடுகள் சர்வதேச முன்னோடி மீளாய்வு சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டன.

## விரிவாக்கல்

### *அபிவிருத்தி கருத்திட்டங்களினூடாக புதிய பொருத்தமான தொழில்நுட்பங்களை பின்பற்றுவதன் மூலமான தேசிய உணவு பாதுகாப்பை நோக்கி*







அபிவிருத்தி கருத்திட்டங்களினூடான மாம்பழங்களை கையாளும் மற்றும் பதனிடும் அலகுகள் தாபிப்பு: சந்தைக்கு 'ஓமாரகொல்ல மாம்பழங்கள் மற்றும் பேராதெனி மாம்பழங்கள்' என இரண்டு வர்த்தக பெயர்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாம்பழங்களின் விநியோக மற்றும் பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகள் மேம்பாடு





தற்போதைய விநியோக சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகளினால் மரக்கறி வகைகளுக்கு ஏற்படும் இழப்பு பற்றிய மதிப்பீடு. அபிவிருத்தி கருத்திட்டம்: இலங்கையில் விவசாய உற்பத்திகளின் விநியோக சங்கிலிகள் முகாமைத்துவம்

மக்கள் சகல நேரங்களிலும், ஒரு துல்லியமான ஆரோக்கியமான வாழ்வுக்கு அவர்களின் உணவுத் தேவைகள் மற்றும் விருப்பம் என்பவற்றை பூர்த்திசெய்கின்ற போதியளவு பாதுகாப்பு வாய்ந்த மற்றும் போஷாக்கு நிறைந்த உணவுகளின் நிமித்தம் பௌதீக, சமூக மற்றும் பொருளாதார பிரவேசத்தைக் கொண்டிருக்கின்ற ஒரு நிலை **உணவுப் பாதுகாப்பு** எனப்படும். அ.பி.தொ.நி. நாட்டில் உணவு பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான தனது கருத்திட்டங்களில் கவனம் செலுத்துகின்றது.

## பயிற்சிகள்

இந்த நிறுவகம் தானியங்கள், நவதானியங்கள், நார்வகைகள், கிழங்கு வகைகள், பழ வர்க்கங்கள் மற்றும் மரக்கறி வகைகள் முதலியவற்றின் கள பயிர்ச்செய்கை பற்றி உற்பத்தித் தரப்புகளுக்கும், பதனிடும் தரப்புகளுக்கும், வியாபாரிகளுக்கும், மற்றும் பணியாளர்களுக்கும், பல்கலைக்கழகங்களினதும் மற்றும் ஏனைய கல்வி நிறுவகங்களினதும் மாணவர்களுக்கும் உற்பத்தி/விரிவாக்கல் மைய வதிவிடப் பயிற்சிகளையும் மற்றும் வதிவிடம் சாராத பயிற்சிகளையும் வழங்குகின்றது. அறிக்கையிடும் ஆண்டு காலப்பகுதியில் ஆய்வு விஜயங்கள் அடங்கலாக அறுபத்து ஒரு (61) வதிவிடப் பயிற்சி பாடநெறிகள் நடத்தப்பட்டன. 2036 தனிநபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. வதிவிடம் சாராத நூற்று பத்து (110) பாடநெறிகள் கள நிலையங்களில் நடத்தப்பட்டு 2955 தனிநபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

*புதிய உற்பத்திகளுக்கு வர்த்தக பெயரிடுவது தவணை விலைகளையும், பாதுகாப்பான உற்பத்திகளையும் மற்றும் போட்டித்தன்மையும் ஏற்படுத்தும் என்பதால் அதுவே எதிர்கால வழிமுறை*





**உசாதுணை மற்றும் ஏனைய சேவைகள்**

அ.பி.தொ.நி. அறுவடைக்கு பின்-கைத்தொழிலில் நேரடியாக அல்லது மறைமுகமாக சம்பந்தப்படுகின்ற அரச தனியார் துறை நிறுவனங்களுக்கும் மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்களுக்கும் உசாதுணை மற்றும் ஆலோசனை ஆகிய சேவைகளை வழங்குகின்றது. அ.பி.தொ.நி., 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியினது நிதி அபிவிருத்தித் திணைக்களத்தின் 'களஞ்சிய பெறுகை கருத்திட்டத்திற்கான' உசாதுணை தரப்பாக பணியாற்றியுள்ளது. 2017 ஆம் ஆண்டிலும் இது தொடர்ந்தது. இந்த கருத்திட்டத்தின் கீழ், முன்கூட்டி சுத்தம் செய்தல் மற்றும் உலர்த்துதல் ஆகிய வசதிகளையுடைய களஞ்சியசாலைகள் எம்பிலிபிட்டிய, மெதிரிகிரிய மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் தாபிக்கப்பட்டன.



மேலும், அ.பி.தொ.நி. கிராமிய பொருளாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட 'குளிர் களஞ்சியசாலைகள் தாபிப்பு' எனும் கருத்திட்டத்திற்கு தனது தொழில்நுட்ப உற்பத்திகளை வழங்கியுள்ளது. அ.பி.தொ.நி.



குருனாகல் நகரத்தில் அமைந்துள்ள வடமேல் மாகாண கைத்தொழில் சேவைகள் பணியகத்திற்கென இரண்டு தொழில்நுட்ப அறிக்கைகளை தயாரித்துள்ளது. சில அரிசி ஆலை கைத்தொழில் தரப்புகளுக்கு அவற்றின் வசதிகளை இற்றைப்படுத்திற்கொள்ளக் கூடிய வகையில் மேலும் ஒரு சில தொழில்நுட்ப உற்பத்திகள் வழங்கப்பட்டன.

**ஒரு வர்த்தக வசதியாக மேம்படுத்தப்பட்ட ஆய்வுகூட சேவைகள்**

அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப நிறுவகம் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அக்கறையுடைய தரப்பகளுக்கு ஆய்வுகூட சேவைகளை வழங்கியுள்ளது. இந்த நிறுவகம் தனது சேவைகளை எமது அக்கறையுடைய தரப்புகளுக்கு வழங்கி அவற்றினூடாக சேவை செய்வதை ஆரம்பித்துள்ளது.



'பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விவசாய பயிர்கள் உலோகப் பதார்த்தங்களினால் அதிகளவு பழுதடைவதை நிர்ணயித்தல்' எனும் கருத்திட்டம் பிரதான கருத்திட்டமாக விளங்கியது. இந்த கருத்திட்டத்தின் கீழ், தோடம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் முதலியன போன்ற உள்ளூர் பழவர்க்கங்களினதும் மற்றும் மரக்கறி வகைகளினதும் அதே போன்று இறக்குமதி செய்யப்படும் அத்தகையவற்றினதும் ஐந்து நூறு (500) மாதிரிகள் கமத்தொழில் அமைச்சின் நிதிகளை பயன்படுத்தி பரிசோதிக்கப்பட்டன.



அறுவடைக்கு பின்தொழில்நுட்ப பிரிவுக்கு அ.பி.தொ.நி. தயாரித்த இயந்திரங்கள்



அ.பி.தொ.நி. உற்பத்தி செய்த அல்லது இறக்குமதி செய்த இயந்திரங்களின் பொருத்தப்பாட்டை அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப பிரிவில் மதிப்பீடு செய்கின்றது. இந்த நிறுவகம் குறித்த கைத்தொழிலில் விற்பனை செய்யும் நிமித்தம் சில இயந்திரங்களை உற்பத்தி செய்கின்றது. பருப்பு வகை தானியங்களின் தோல் உரிக்கும் இயந்திரம் மிகச்சிறந்த விற்பனையாகும் இயந்திரமாகும். குறித்த துறைக்கு 2017 ஆம்

ஆண்டில் ஆறு (06) இயந்திரங்கள் உற்பத்தி செய்து வழங்கப்பட்டன.

## சமூக, நலன்புரி மற்றும் சமய செயற்பாடுகள்

இந்த நிறுவகம் ஊழியர்களின் உறவுகளை கட்டியெழுப்புவதற்கும் மற்றும் ஊழியர்களுக்கும் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கும் மத்தியில் நல்ல எண்ணத்தை வளர்ப்பதற்கும் என தொடர்ந்தும் தனது நலன்புரி சார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. ஜனாதிபதியின் அலுவலகத்தினது அறிவுரைகளின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி ஊழியர்கள் தினம் கொண்டாடப்பட்டது. அதே நாள் மாலை நேரத்தில், நிறுவகத்தின் நலன்புரி சங்கம் அதன் ஊழியர்களையும் மற்றும் ஊழியர்களின் குடும்பங்களையும் ஒன்றிணைத்து விளையாட்டு நிகழ்வுகளை நடத்தியது.





'தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு' அதற்கு இணையாக நீண்டகால சேவையை பாராட்டும் நிகழ்வும் நடத்தப்பட்டது. இந்த நிறுவகத்திற்கு 25 ஆண்டுகளுக்கும் அதிக கால சேவையை வழங்கிய ஊழியர்களுக்கு 50,000.00 ரூபா பெறுமதியான காசோலைகள் மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் வழங்கி வைக்கப்பட்டன.





நெல் சந்தைப்படுத்தல் சபையின் அரிசி பதனிடுதல் மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கான ஒரு வாரிசு நிறுவனமாகிய அ.பி.தொ.நி. 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப நிறுவகம் என்ற

ரீதியில் தனது 17-வது தாபிப்பு நிறைவு ஆண்டை கொண்டாடுகின்றது. இந்த நிகழ்வை முன்னிட்டு குழு கருத்தை அதிகரிப்பதற்கும் மற்றும் பிரதேசத்தில் மக்களை வலையமைத்து ஒன்றிணைப்பதற்கும் என 'சர்வ ராத்திரி பிரித் சஜ்ஜயனய' சமய வழிபாடு ஏற்பாடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் நடத்தப்பட்டது.





## நிதி சார்ந்த செயலாற்றுகை

2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2017 ஆம் ஆண்டின் நிதி சார்ந்த செயலாற்றுகை சாதகமான மேம்பாட்டை காண்பித்தது.

| விவரம் | 2016 (மில்.ரூ.) | 2017 (மில். ரூ.) | வளர்ச்சி (மில்.ரூ.) |
|---|---|---|---|
| குறித்த ஆண்டிற்கான துண்டுவிழுகை | (9.5) | (8.2) | 13.7 |
| காசு ஒப்புரவு | 29.8 | 27.9 | -6.37 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | 33.8 | 79.8 | 136.1 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | 17.4 | 65.3 | 275.29 |
| தேறிய சொத்துக்கள் (ஒப்புரவு) | 175.7 | 211.2 | 20.2 |

## மனித வளங்கள்

சிரேஷ்ட எந்திர பொறியியலாளர் எச்.எம்.ஏ.பி. ரத்நாயக்க பதில் மேலதிகப் பணிப்பாளராக (ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றல்) நியமிக்கப்பட்டார். ஒரு ஆராய்ச்சி உத்தியோகத்தரும் மற்றும் ஒரு சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரும் பல்கலைக்கழக பதவியணியில் இணையும் பொருட்டு இந்த நிறுவகத்திலிருந்து பதவி விலகினார்கள். அ.பி.தொ.நி. ஆராய்ச்சி பணிக் குழுவை வலுப்படுத்தும் முகமாக மேலும் பத்து புதிய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.
அ.பி.தொ.நி. தனது 18 வருட கால வரலாற்றில், முதல் முதலாவதாக இலக்கம் 28, எத்துள்கோட்டே சந்தி, பத்தரமுல்ல எனும் முகவரியில் அமைந்துள்ள தனியான ஒரு கட்டிடத்தில் தனது தலைமை அலுவலகத்தை திறந்து வைத்தது.

**பொறியியலாளர் மஹேஸ் திஸாநாயக்க**
பணிப்பாளர்/பி.நி.உ.

## செயலாற்றுகை பற்றிய முக்கிய குறிப்புகள்

### ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

ஆராய்ச்சி, அ.பி.தொ.நி. பிரதான செயற்பாடாக விளங்குவதால், இந்த நிறுவகம் அறுவடைக்கு பின்-கைத்தொழில் எதிர்நோக்குகின்ற தொழில்நுட்ப பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுவதை நோக்கி பணிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின்படி, ஆராய்ச்சி முயற்சிகளில் ஏனையவை செல்வாக்கு செலுத்தினாலும் முதலில் அடிப்படை மற்றும் பிரயோக ஆராய்ச்சிகள், ஆராய்ச்சி சார்ந்த செயற்பாடுகளில் உள்ளடங்குகின்றன.

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், பதினேழு (17) ஆராய்ச்சி கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சி கருத்திட்டங்களில், 2016 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும் பத்து (10) ஆராய்ச்சி கருத்திட்டங்கள் அடங்குகின்றன. 2017 ஆம் ஆண்டில், ஏழு (07) புதிய ஆராய்ச்சி கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில், மூன்று (03) கருத்திட்டங்களுக்கு தனியார் துறையினரால் நிதியிடப்பட்டது. இரண்டு (02) கருத்திட்டங்களுக்கு தேசிய விஞ்ஞான மன்றத்தினாலும் மற்றும் இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையினாலும் நிதியிடப்பட்டது. மற்றைய ஏழு (07) கருத்திட்டங்கள் மாணவர் கருத்திட்டங்களாக செயற்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டன.

ஆராய்ச்சியின் முடிவுகளை புதிய தொழில்நுட்பங்களாக அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப பிரிவினுள் அதன் மேம்பாடு நிமித்தம் பரம்பல்செய்வதற்கு மேலதிகமாக, ஆய்வுகளின் முடிவுகள் வித்தியாசமான பல்கலைக்கழகங்களினால் நடத்தப்பட்ட மாநாடுகளிலும், இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தின் தேசிய மற்றும் சர்வதேச பிரசித்த முன்னோடி சஞ்சிகைகளிலும் வெளியிடப்பட்டன.

**2016 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தும் நிகழும் ஆராய்ச்சி கருத்திட்டங்கள்**

1. மிளகாய் தூளின் க்ரையொஜெனிக் அளவை குறைத்தல்
2. அரிசி பதனிடும் இன்ப்fரா-ரெட் (IR) பிரயோகம்
3. விவசாய உற்பத்திகளை சுத்தம் செய்வதற்கும் மற்றும் அவற்றில் கலந்திருக்கும் கற்களை நீக்குவதற்குமான தொழில்நுட்ப அபிவிருத்தி
4. இலங்கையின் வித்தியாசமான மாவட்டங்களில் அதிகளவில் மரக்கறிப் பயிர்கள் பயிரிடப்படும் சில பகுதிகளில் உலோகப்

பதார்த்தங்களினால் அதிகளவில் ஏற்படும் பழுதடைவுகள் பற்றிய மதிப்பீடு

5. உள்ளூர் ரீதியாக கிடைக்கக்கூடிய பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த மரக்கறிப் பயிர்களுக்கு பொருத்தமான குறைந்த வெப்பநிலை களஞ்சிய நிலை பற்றிய மதிப்பீடு
6. விவசாய பண்ணை களஞ்சியத்தின் போது அறுவடைக்கு பின்னர் நெல்லின் நிறை குறைதல் மற்றும் தரம் கெடுதல் பற்றிய நிர்ணயம்
7. அவசரநிலைமைகளின் போது ஈர நெல்லை உலர்த்துவது பற்றிய ஆய்வு
8. ஓஷோன் தொற்றுநீக்கியை பயன்படுத்தி வாசனைப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துதல்
9. தக்காளி சாறின் க்ரட்டினொய்ட் உயிரியல் அணுகுதன்மையிலும் மற்றும் மொத்த ஒட்சிசன் எதிர்வினை ஆற்றலிலும் காணப்படும் அனல்வெப்ப பதனிடுகையின் தாக்கம்
10. வித்தியாசமான களஞ்சிய நிலைமைகளில் எலுமிச்சைகளை பழுதடையாமல் பாதுகாப்பது தொடர்பில் பழங்களுக்கு மெழுகிட்டு பாதுகாப்பதிலுள்ள பலன்கள் பற்றிய மதிப்பீடு

**2017 ஆம் ஆண்டில் நிகழும் புதிய ஆராய்ச்சி கருத்திட்டங்கள்**

1. ப்ளாஸ்டிக் போத்தல்களிலிருந்து நகரும் பொலிமரை கண்டறிந்து கணியப்படுத்துவதற்கான தொழில்நுட்பத்தை தயாரித்து உணவு உற்பத்தி கைத்தொழிலில் பயன்படும் சாப்பிடக்கூடிய எண்ணெய்யின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
2. நெல் உமி சிலிகெனை செயற்கை பங்கசுகொல்லிகளாக பயன்படுத்தி பச்சை மிளகாய்க்கென அறுவடைக்கு முன்னரும் மற்றும் அறுவடைக்கு பின்னரும் ஏற்படும் பீடைகளை கட்டுப்படுத்துதல்

**வெளிவாரியாக நிதியிடும் ஆராய்ச்சி கருத்திட்டங்கள்**

1. அறுவடைக்கு பின்னர் எலுமிச்சைகளை (*Citrus aurantifoila* Swingle ) பழுதடையாமல் பாதுகாப்பதை மேம்படுத்துதல் மற்றும் பழங்களின் தரம் மீதான அறுவடைக்கு முற்பட்டகால பொலியர் பதனிடுகைகள், பழ பெனொலொஜி ஆகியன பற்றிய ஆய்வு: (NSF /538 மானியத்தின் கீழ் தேசிய விஞ்ஞான மன்றத்திலிருந்து இந்த கருத்திட்டத்திற்கு நிதி கிடைத்தது).
2. எலுமிச்சைகளை (*Citrus aurantifoila* Swingle) அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் பழுதடையாமல் பாதுகாப்பதை மேம்படுத்துவதற்கான பதனிடும் முறையியல்களையும் மற்றும் களஞ்சிய திறமுறைத்திட்டங்களையும் தயாரித்தல்: (15-154 ஆம் இலக்க

மானியத்தின் கீழ், இலங்கையின் தேசிய ஆராய்ச்சி சபையிலிருந்து இந்த கருத்திட்டத்திற்கு நிதி கிடைத்தது).

## தனியார் தரப்பு நிதியிட்ட ஆராய்ச்சி கருத்திட்டங்கள்

1. வித்தியாசமான களஞ்சிய நிலைமைகளில் பழ ஜெலி தயாரிப்பும் மற்றும் தோல் பழுதடையாமல் பாதுகாப்பதை நிர்ணயித்தலும்: இலக்கம் 31, ரிவெர்வீவ், வாரியபொல, அளவ்வ எனும் முகவரியிலுள்ள செரன்டிப் ப்ளோரா (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம் நிதியிட்டது.
2. நடுத்தரளவான அரிசி மாவு நூடில்ஸ்கள் தயாரிப்பும் மற்றும் பதனிடுதல் அனுகூலமும் (2016.03.31 - 2017.05.31): நிட்டம்புவ அமிலா இன்டஸ்ட்ரீஸ் நிதியிட்டது.
3. நடுத்தரளவில் அரிசி மாவை அரிக்கும் அரி சாதனத்தின் தயாரிப்பு: நாரம்மல தாச அயன் வேர்க்ஸ் நிதியிட்டது.

**மாணவர் கருத்திட்டங்கள்**

| இல. | மாணவன் | மேற்பார்வையாளர் | ஆராய்ச்சி விடய தலைப்பு |
|---|---|---|---|
| 01 | செல்வி கே.எம்.டீ.என். ரொட்ரிகோ | திரு சி.ஆர். குணவர்த்தன | ஒரு சோஷொப் ஜேமினது (*AnnonamuricataL.*) சுவை, பிஷிகோகெமிகெல், பைட்டோகெமிகெல் பண்பியல்புகள் அபிவிருத்தியும் மற்றும் மதிப்பீடும் |
| 02 | செல்வி பி.ஐ. சஷங்கா | கலாநிதி (திருமதி) ஆர்.எம்.என்.ஏ. விஜேவர்த்தன | புளி வாழைப்பழமும் (*Musa spp.*) கற்கண்டு சிற்றஸ் உறையும் (*Citrus Aurantifolia*) உடைய பிஸ்கெட்டுக்களின் போஷனை, தரம் சுவை |
| 03 | செல்வி ஏ.பி.எப்f. ஹுஸ்னா | பொறியியலாளர் ரீ.எம்.ஆர். திஸாநயாக்க | நெல்லை புழுங்கவைப்பதிலும் மற்றும் அரிசி ஆலைகளின் தரங்களிலும் பாா்ர் இன்-fப்ரா ரெட் ரேடியேஷனின் பயன் |
| 04 | திரு அனுபமா விஷ்வா பிரபாத் | கலாநிதி (திருமதி) ஆர்.எம்.என்.ஏ. விஜேவர்த்தன | எலுமிச்சையை பழுதடையாமல் பாவிக்கக்கூடிய காலத்தை நீடிக்கும் நிமித்தம் வித்தியாசமான களஞ்சிய நிலைமைகளில் பழங்களின் தர ரீதியான பயன்கள் |
| 05 | செல்வி மஹேஷிக்கா ஹேரத் | திருமதி ஆர்.எம்.ஆர்.என்.கே. ரட்நாயக்க | மாங்காய் அடித்தண்டு பழுக்கவைத்தல் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கை பிரயோகம் பற்றிய ஆய்வு |
| 06 | செல்வி நதீகா பிரேமரத்ன | திரு டப்ளியூ.எம்.சி.பீ. வாசல | கவன்திஸ் வாழையை கனியவைப்பதில் தாமதம் - உள்நாட்டு காலநிலையில் 1 Methylcyclopropene பிரயோகித்தல் |
| 07 | செல்வி எஸ்.எம்.ஏ.பி. சிறிவர்த்தன | கலாநிதி (திருமதி) ஆர்.எம்.என்.ஏ. விஜேவர்த்தன | *Capsicum annum* L (Hybrid Muriya) இற்கான குறைந்த வெப்ப களஞ்சிய நிலைமைகள் மற்றும் மெழுகிட்டு தரத்தை பாதுகாப்பதை மேம்படுத்தல் பற்றிய மதிப்பீடு |

**நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சி கருத்திட்டங்கள்**

**01. வித்தியாசமான களஞ்சிய நிலைமைகளில் எலுமிச்சையை பழுதடையாமல் பாதுகாப்பது தொடர்பில் பழங்களுக்கு மெழுகிட்டு பாதுகாப்பதன் பலன்கள் பற்றிய மதிப்பீடு**




மெழுகிட்டு பதனிடும் முறை எலுமிச்சையின் தரத்தையும் சிறப்பம்சத்தையும் மேம்படுத்துகின்ற அதே வேளையில் தோல் ஆயுட்காலத்தையும் நீடித்துள்ளது

a. மெழுகிடும் குறித்த பதனிடுகையின்றி வழமையான காலநிலையில் களஞ்சியப்படுத்தப்பட்ட எலுமிச்சை
b. மெழுகிட்டு பதனிட்ட பின்னர் வழமையான காலநிலையில் களஞ்சியப்படுத்தப்பட்ட எலுமிச்சை

தூய புதிய எலுமிச்சையை பழுதடையாமல் பாதுகாக்கும் நிமித்தம் அறுவடைக்கு பிற்பட்டகால மெழுகிட்டு பதனிட்டு (13°C, 85% RH), மின்சக்தி நுகரா குளிராக்கி அறை (ZECC) (16-18 °C, 75-80% RH) வழமையான களஞ்சிய நிலை (30-32 °C, 65-70% RH) போன்ற வித்தியாசமான களஞ்சிய நிலைமைகளின் பலன்களை மதிப்பிடும் பொருட்டு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மெழுகிட்டு பதனிடும் முறை புதிய எலுமிச்சைகளின் தரத்தையும் பண்பியல்புகளையும் பயனுள்ள விதத்தில் பாதுகாப்பதற்கு உதவியது. இதனால், முறையே வளிமண்டல ZECC மற்றும் குளிரான களஞ்சிய நிலைமைகளில் 15 நாள் முதல் 30 நாட்கள் வரையும் மற்றும் 40 நாட்கள் வரையயும் பழுதடையாமல் பாதுகாக்க முடிந்தது. மெழுகிட்டு பதனிடுவதால் எலுமிச்சைகள் பழுதடையாமல் பாதுகாக்கலாம் என ஆய்வின் முடிவுகள் வெளிப்படுத்தின. ஆகையால், மின்சக்தி நுகராத குளிராக்கி சாதாரண அறை வெப்பநிலையிலும் மற்றும் குளிர் அறைகளிலும் மெழுகிட்டு பதனிடப்பட்ட எலுமிச்சைகளின் பாவனை காலம் முறையே 15,30 நாட்கள் மற்றும் 0 நாள் என்ற அளவில் காணப்பட்டது.

## 2. விவசாய நுகர்வுப் பொருட்களை சுத்தப்படுத்தி அவற்றில் கலந்திருக்கும் கற்களை நீக்குவதற்கான தொழில்நுட்ப அபிவிருத்தி

குரக்கன் தானியத்தை சுத்தம் செய்து அதில் கலந்திருக்கும் கற்களை நீக்குவதற்கான அறை வடிவ நெல் பிரித்தெடுக்கும் வடிவ இயந்திரத்தின் பொருத்தப்பாடு பற்றி இந்த ஆய்வில் மதிப்பிடப்பட்டது. குரக்கன் தானியத்திற்கான இந்த இயந்திரத்தின் சுத்தம் செய்யும் வினைத்திறன், தானியங்களை பிரித்தெடுக்கும் வினைத்திறன், வெளியீட்டு ஆற்றல் மற்றும் சக்தி நுகர்வு என்பன தொடர்ச்சியான மாசு அளவுடன் ஆடும் வேகம் பிரி மேசை என்பவற்றின் சாய்வுகள் அடங்கலாக இரண்டு பிரதான சீராக்கல்களைக் கொண்டு மதிப்பிடப்பட்டன. ஏனையவற்றுடன் ஒப்பிடும் போது சிறந்த சாய்வு மட்டத்தில் 3.5 அளவு



நிர்மாணிக்கப்பட்ட கற்களை

மற்றும் வேக மட்டத்தில் 1 அளவு என்ற அடிப்படையில் இயந்திர சீராக்கல்களின் மூலம் 100% சுத்தம் செய்யும் வினைத்திறனையும், 85.59% பிரித்தெடுக்கும் வினைத்திறனையும் மற்றும் 635.9 கி.கி./ம. இயந்திர ஆற்றலையும் அடைந்துகொள்ள முடியும் என ஆய்வின் முடிவுகள் சுட்டிக்காட்டின. ஆகையால், இதிலிருந்து, அறை வடிவ நெல் பிரித்தெடுக்கும் அமைப்பிலான இயந்திரம் மேற்குறித்த இயந்திர சீராக்கல்களின் கீழ் குரக்கன் தானியத்திலுள்ள கற்களை நீக்குவதற்கு பொருத்தமான இயந்திரமாகும் என்ற முடிவுக்க வரலாம்.

## 3. அவசரநிலைமைகளில் ஈரளிப்பான நெல்லை உலர்த்துவது பற்றிய ஆய்வு

கடந்த சில தசாப்தங்களில், மழைவீழ்ச்சி மாதிரிகள் கடுமையாக மாற்றமடைந்துள்ளன. பாரியளவில் நெல்லை உற்பத்தி செய்கின்ற பிரதேசங்களில் அறுவடை காலப்பகுதியில் அதிகளவு மழை பெய்ததால், நெல் அறுவடை அதிகளவில் பாதிக்கப்பட்டது. நெல் அறுவடை காலத்தில் மழை பெய்வதால் சூரிய வெப்பத்தில் நெல் உலர்த்தல் கடுமையாக பாதிக்கப்படுகின்றது. ஆகையால், நெல்லை உற்பத்தி செய்கின்ற தரப்புகள் இயந்திர முறையில் உலர்த்தும் முறையியல்களை தேர்ந்தெடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றன. எந்திர உலர்த்திகளில், நெல் உமி எரி சாதனமாக அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் எரிவிறகுகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனாலும், மழை பெய்யும் நாட்களில், எந்திர உலர்த்திகளை இயக்குவதற்கு தேவையான உலர்ந்த எரிவிறகுகளையும் மற்றும் நெல் உமிகளையும் தேடிப்பெற்றுக் கொள்வது கடினமாகும். நெல் வயல்களிலிருந்து அதிக தூரத்தில் அமைந்துள்ள பாரியளவில் அரிசியை குற்றுகின்ற அரிசி ஆலைகளில் இத்தகைய எந்திர உலர்த்திகள் கிடைக்கக்கூடியதாகவுள்ளதாலும், மழை காலத்தில் நெல்லை ஏற்றியிறக்குவது கடினம் என்பதாலும் உலர்த்தும் பிரதியீட்டு முறையியல் அவசியமாகும்.



தயாரிக்கப்பட்ட உலர்த்தி

ஆகையால், இந்த கருத்திட்டத்தின் கீழ், நெல்லை உலர்த்தும் ஒரு பிரதியீட்டு முறையியல் தேவைப்பட்டது. இந்த கருத்திட்டத்தின் போது, வெப்ப பம்பியின் உதவியுடன் ஈரளிப்பை போக்கும் முறையியல் பிரயோகிக்கப்பட்டது. இந்த முறையியல் வெற்றியடைந்தது. அதிக ஈரளிப்பான நெல்லை களஞ்சியப்படுத்துவதால் நெல் தர மற்றும் கணிய ரீதியில் இழக்கப்படுவதை தடுப்பதற்கு, கண்டறியப்பட்ட முறையியல்கள் உதவும். அது மட்டுமன்றி, கண்டறியப்பட்ட இந்த உலர்த்தும் முறையியல்கள் ஒன்றிணைந்த அறுவடை இயந்திரத்தினால் புதிதாக அறுவடை செய்யப்படும் அதிக ஈரளிப்பான நெல்லை

உலர்த்துவதிலுள்ள மற்றுமொரு பாரிய பிரச்சினையை தீர்ப்பதற்கும் உதவும். தரத்தில் உயர்ந்த நெல் உற்பத்தி விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும். தரத்தில் உயர்ந்த நெல் அரியாக உற்பத்தி செய்யப்படும் போது அரிசி ஆலைகளின் உற்பத்தியும் மேம்படும். நெல் குறைவாக இருக்கின்ற காலப்பகுதியில், இந்த முறைமையை புழுங்கிய நெல்லை அல்லது சோளம், மிளகாய், பழங்கள் மற்றும் மரக்கறி முதலியன போன்ற ஏதாவது ஏனைய விவசாய உற்பத்திகளை உலர்த்துவதற்காகவும் பயன்படுத்தலாம்.

## 4. இலங்கையில் வித்தியாசமான மாவட்டங்களில் அதிகளவில் மரக்கறிப் பயிர்கள் வளர்க்கப்படும் சில பகுதிகளில் அதிகளவு உலோகப் பதார்த்தங்களினால் ஏற்படும் பழுதடைவுகள் பற்றிய மதிப்பீடு

உணவு பாதுகாப்புக்கான பொது மற்றும் சர்வதேச தேவை என்ற ரீதியில், தீங்கான உலோகப் பதார்த்தங்களிலிருந்து வரும் அதிகளவில் தீங்குகள் அற்ற உணவுப் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. பாரியளவில் உலோகப் பதார்த்தங்களினால் ஏற்படும் பழுதடைவுகளை ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவுக்கு சமாளிக்கும் வகையில் தேசிய மற்றும் சர்வதேச பொறுப்புக்களை பாதுகாக்கும் பொருட்டு தொடர்ந்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.



பாரியளவான உலோக பதார்த்தங்களினால் ஏற்படும் பழுதடைவுகளை பகுப்பாய்வு செய்யும் நிமித்தம் அ.பி.தொ.நி. ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஒருவர், திராட்சையை பயிரிடும் விவசாயி ஒருவரிடமிருந்து திராட்சை மாதிரிகளை சேகரிக்கும் காட்சி. திகதி 2017.05.18, யாழ்ப்பாணம்

பாதுகாப்பான உணவுகள் தொடர்பில் பொது மற்றும் சர்வதேச கேள்வி அதிகரித்து வருவதால், குறிப்பாக வித்தியாசமான நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களில் காணக்கூடிய அநேகமாக பாரியளவில் பாதிக்கும் ஆபத்தான உலோகப் பதார்த்தங்களை இனங்காணுவது மிக முக்கியமானது. உள்நாட்டிலுள்ள பல இறக்குமதித் தரப்புகள் ஐரோப்பிய நாடுகள் போன்ற ஏனைய நாடுகளில் பின்பற்றப்படுகின்ற ஏதாவது உணவு பாதுகாப்பு நியமத்தை பின்பற்றாது அதிகளவான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்கின்றன.
இந்த ஆராய்ச்சி ஆய்வு உள்ளூர் ரீதியாக உற்பத்தி செய்யப்படும் பழ வர்க்கங்கள் மற்றும் மரக்கறி வகைகள் மற்றும் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களான (ஆப்ள் பழங்கள், தோடம் பழங்கள், திராட்சைப் பழங்கள், சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் மிளகாய்) ஆகிய பொருட்களின் மாதிரிகளை சேகரித்து அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட 04 பிரதான பாரிய உலோகப் பதார்த்தங்கள் (As, Pb, Cd

and Cu) அடங்கியிருப்பதை பரிசோதிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டது. மாதிரிகள் பின்வரும் இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டன.

- இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்: இலங்கை, ஒறுகொடவத்த எனும் இடத்தில் அமைந்துள்ள இலங்கை சுங்கத் திணைக்களத்தின் RCT முனையம்.
- உள்ளூர் ரீதியாக உற்பத்தி செய்யப்படும் பொருட்கள்: இலங்கையில் அறுவடை செய்யும் உள்ளூர் விவசாயிகள் மற்றும் உள்நாட்டு சந்தைகள்.

பரிசோதனை அறிக்கைகள், இலங்கை கமத்தொழில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நாம் பரிசோதித்த பாரிய உலோகப் பதார்த்தங்கள் (As, Pb, Cd and Cu) அதிகளவு உள்ளடங்கிய சில மாதிரிகளை கண்டறிந்துள்ளோம். இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் உணவுகளில் நச்சுப் பதார்த்தங்கள் உள்ளடங்கியிருப்பதையும் மற்றும் அதனால் வரும் சுகாதார ஆபத்துக்களையும் பற்றி பொதுமக்களின் அறிவை மேம்படுத்த செய்யும் மற்றும் அத்தகைய உலோக பதார்த்தங்களினால் ஏற்படும் பழுதடைவுகளை கட்டுப்படுத்தும் சில சட்ட நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தும்/ சரியான தீர்மானங்களை மேற்கொள்ளும் நிமித்தம் அரசாங்கத்தின் மீது செல்வாக்கு செலுத்தும் வகையில் பயன்படுத்தப்படலாம்.

## 5. பண்ணை களஞ்சியத்தின் போது அறுவடைக்கு பின் நெல்லின் தரம் கெடுதல் மற்றும் நிறை குறைதல் ஆகியவற்றை நிர்ணயித்தல்

தானியங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆராய்ச்சி ஆய்வுகளுக்கு இணங்க, தானியங்களின் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்பு அண்ணளவாக 10-13% என்ற வீதத்தில் காணப்படுகின்றது. இது 420,000 மெற்றிக் டொன் நெல் இழப்புகளையும் மற்றும் 3780 மில்லியன் ரூபா நட்டத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. எனினும், மேம்படுத்தப்பட்ட அறுவடைக்கு பிற்பட்டகால செயன்முறைகளின் பிரயோகத்தைக் கொண்டு, கிடைக்கக்கூடிய இந்தத் தரவுகளில் வித்தியாசம் இருக்கலாம். தானியங்களின் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளின் தற்போதைய நிலையை பகுப்பாய்வு செய்வது ஒரு அத்தியாவசிய தேவையாகும். இந்தப் பிண்ணனியில், பண்ணை களஞ்சியத்தின் போது, அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் நெல்லுக்கு ஏற்படும் இழப்புகளை மதிப்பிடும் பொருட்டு இந்த ஆராய்ச்சி கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. களஞ்சிய மட்டத்தில் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்பு 6% வீதத்தில் காணப்படுவதாக ஆய்வின் முடிவுகள் வெளிப்படுத்தின. பூச்சிகளின் தாக்கங்கள் இந்த இழப்புக்கான முக்கிய காரணியாக இனங்காணப்பட்டுள்ளன.

## 6. பழங்களின் தரம், மற்றும் எலுமிச்சை பழத்தின் அறுவடைக்கு பிற்பட்ட பாவனை காலம் என்பன தொடர்பான வளர்ச்சி

## ஒழுங்குறுத்திகள் பழ பெனொலொஜி மற்றும் போலியா பதனிடும் முறைகள் பற்றிய ஆய்வு

தூய புதிய எலுமிச்சை பழங்களுக்கு (*Citrus aurantifolia* Swingle) அது உள்நாட்டு சமையலிலும், உணவு பதனிடும் கைத்தொழிலிலும் மற்றும் உள்நாட்டு மருந்துகள் தயாரிப்பிலும் ஒரு கலவையாக ஆண்டுதோறும் பயன்படுத்தப்படுவதால் தொடர்ச்சியான ஒரு கேள்வி நிலவுகின்றது. ஆகையால், இது அறுவடைக்கு பின்-தொழில்நுட்பம் மற்றும் பெறுமானம் சேர்த்தல் பற்றிய தேசிய குழுவினால் அதிக முந்துரிமைப் பயிர்களில் ஒரு பயிராக இனங்காணப்பட்டுள்ளது. எலுமிச்சைப் பழங்கள் அரிதாக கிடைக்கும் காலப்பகுதியில், அதன் விலை கி.கி. ஒன்றுக்கு நுகர்வோரால் சுமக்கக்கூடிய இயலாத அளவுக்கு விலை (600-1000 இ.ரூ.) அதிகரிக்கின்றது. மறுபுறத்தில், எலுமிச்சைப் பழங்கள் அதிகளவில் கிடைக்கும் காலப்பகுதியில், எலுமிச்சை பழங்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் அதற்காக அவர்கள் செலவு செய்த செலவை கூட ஈடுசெய்துகொள்ள முடியாத நிலையில், பழங்களை அறுவடை செய்யாது விடும் அளவுக்கு விலை குறைகின்றது. எனினும், இந்தப் பயிரின் அறுவடைக்கு முந்திய மற்றும் அறுவடைக்கு பிந்திய கால பிரச்சினைகளை அடையாளப்படுத்தும் வகையில் இன்னும் இலங்கையில் முறையான ஆராய்ச்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஆதலால், தேசிய அளவில், குறித்த தொழில்நுட்பம் இன்னும் வளர்ச்சியடையாத நிலையிலுள்ளது. ஆகையால், குறித்த ஆராய்ச்சி ஆண்டுதோறும் சந்தைப்படுத்தல் முழுதிலும் திட்டமிடப்படும் அளவுக்கு பழ பருவகாலங்களை இயக்குதல், பழங்களின் பெனொலொஜி, முதிர்ச்சி என்பன பற்றி ஆய்வு செய்வதில் இலக்குக்கொள்கின்றது. எலுமிச்சைப் பழங்களின் வளர்ச்சி, அபிவிருத்தி மற்றும் முதிர்ச்சி (பெனொலொஜி) முதலிய கட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. கள நிலைமைகளில் பயன்படுத்தப்படும் நிமித்தம் விசாயிகளுக்கு மத்தியிலும் மற்றும் ஏனைய உரிய தரப்புகளுக்கு மத்தியிலும் பகிர்ந்தளிக்கும் பொருட்டு நிற வரைபுகளும் மற்றும் அளவு வளையிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த கருத்திட்டத்திற்கு இலங்கை தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நிதியிடப்பட்டது.




எலுமிச்சை (*C. aurantifolia*) பழத்தின் 24 பெனொலொஜிக் கட்டங்களில் அவதானிக்கப்பட்ட வித்தியாசம் (14, 28 முதலிய நாட்களின் பின்னரான பழ தொகைகள்)

## அபிவிருத்தி கருத்திட்டங்களினூடாக தொழில்நுட்ப பரிமாற்றல் செயற்பாடுகள்

தொழில்நுட்ப பிரயோகத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அ.பி.தொ.நி. மூலம் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அறுவடைக்கு பிற்பட்டகால கைத்தொழிலில் அவற்றின் தாக்கங்கள் பற்றி கீழே விவரிக்கப்பட்டுள்ளன. தேசிய முந்துரிமைகள் உற்பத்திகளை அதிகரித்தல், ஏற்றுமதி சந்தைகள், விவசாய வியாபார அபிவிருத்தி பற்றி ஆராய்தல், மற்றும் உணவுகள் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் என்பவற்றில் இலக்குக்கொள்கின்ற அதே வேளையில், அறுவடைக்கு பின்-தொழில்நுட்பம் தேசிய நோக்கெல்லையின் மிகவும் ஒரு முந்துரிமை விடயமாக மாறியுள்ளது. இந்த சூழ்நிலையில், அ.பி.தொ.நி. அறுவடைக்கு பிற்பட்டகால செயற்பாட்டுப் பிரிவிலுள்ள பிரச்சினைகளை அடையாளப்படுத்தும் நிமித்தம் அபிவிருத்தி கருத்திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றியது. இதனால், விவசாய உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைத்தல் ஆகியவற்றில் இலக்குக்கொள்ளப்படுகின்றது. மேலும், இந்த கருத்திட்டங்கள் நாடு முழுதிலும் விவசாய வியாபார அபிவிருத்திற்கான மேம்பட்ட தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதிலும் இலக்குக்கொள்கின்றது.

அறுவடைக்கு பின்-தொழில்நுட்பங்கள் பற்றிய தகவல்களை நாடளாவிய ரீதியில் பயனுள்ள விதத்தில் பரம்பச்செய்வதன் நிமித்தம், அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப நிறுவகம் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 08 அபிவிருத்தி கருத்திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளது. இந்த கருத்திட்டங்களுக்கு 'தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்' கீழ் கமத்தொழில் அமைச்சினால் நிதியிடப்பட்டது. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கமத்தொழில் அமைச்சினூடாக மொத்தம் 70.4 மில்லியன் ரூபா நிதி கிடைத்திருந்தது. அந்த அபிவிருத்தி கருத்திட்டங்கள் பின்வருமாறு:

a. இலங்கையில் மாம்பழ விநியோக மற்றும் பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகள் மேம்பாடு
b. இலங்கையில் கொய்யா விநியோக மற்றும் பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகள் மேம்பாடு
c. இலங்கையில் பபாயா விநியோக மற்றும் பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகள் மேம்பாடு
d. இலங்கையில் வாழைப்பழ விநியோக மற்றும் பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகள் மேம்பாடு
e. இலங்கையில் விவசாய உற்பத்திகளின் விநியோக மற்றும் பெறுமான சங்கிலிகள் முகாமைத்துவம்

f. பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த உணவுப் பொருட்கள் பாரியளவில் உலோகப் பதார்த்தங்களினால் பழுதடைதலை நிர்ணயித்தல்
g. இயற்கையாக பழங்களை கனியவைக்கும் முறையியல்களை அறிமுகப்படுத்துதல்
h. இலங்கையிலுள்ள பாரியளவான விவசாய நிறுவனங்களில் விவசாய உணவுப் பயிர்களுக்கு அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் ஏற்படும் இழப்புகளை குறைப்பது தொடர்பான பயிற்றுவிப்பாளர்கள் பயிற்சி

இந்த 8 கருத்திட்டங்களில், இறுதியாக குறிப்பிடப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டது. ஏனைய 7 கருத்திட்டங்களும் 2018 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## a. இலங்கையில் மாங்காய்களின் விநியோக மற்றும் பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகள் மேம்பாடு

மாங்காய் அதன் அதிக சுவை மற்றும் இயற்கை பெறுமானம் ஆகியவற்றின் காரணமாக அதிகளவில் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்படுகின்ற அதே வேளையில் வர்த்தக அளவிலும் பயிரிடப்படுகின்றது. தரத்தில் உயர்ந்த சுவையான மாம்பழங்களுக்கு உள்நாட்டு சந்தையிலும் மற்றும் சர்வதேச சந்தையிலும் அதிக கேள்வி நிலவுகின்றது. எனினும், மாம்பழங்கள் உற்பத்தித் தொழிலில் அறுவடைக்கு பிற்பட்டகால அதிக இழப்புகள் மற்றும் அறுவடைக்கு பிற்பட்டகால முறையற்ற செயன்முறைகள் என்பவற்றின் காரணமாக மாம்பழங்களின் தரம் குறைதலை கையாளுவதில் அதிகளவான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்றது. இந்த நிலைமை நுகர்வோருக்கு கிடைக்கும் நன்மைகளை மட்டுப்படுத்தி மாங்காய் உற்பத்தித் தொழிலை பின்னடைவுக்கு கொண்டுசென்றிருந்தது. இதனால், மாம்பழங்களுடன் சம்பந்தப்பட்ட ஏனைய சகல நன்மை பெறுநர்களினதும் இலாபம் குறைவடைகின்றது. அது மட்டுமன்றி பழங்களின் தரம் குறைந்து, சந்தையில் விலை அதிகரிப்பதற்கும் காரணமாக அமைகின்றது.

இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் பொருட்டு, 2016 ஆம் ஆண்டில் ஒரு அபிவிருத்தி கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இந்த கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மாம்பழங்களின் விநியோக மற்றும் பெறுமான சங்கிலிகளை மேம்படுத்தும் செயற்பாடுகள் இந்த கருத்திட்டத்தில் உள்ளடங்குகின்றன. குறித்த கருத்திட்டத்தினூடாக, பிரதானமாக ஒரு அடிப்படை ஆய்வு, பயிற்சி மற்றும் நாடு முழுதிலும் பழங்களை கையாளும் மற்றும் பதனிடும் அலகுகளை தாபிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன. சகல விதத்திலும் பொருத்தமான அறுவடைக்கு பின்-தொழில்நுட்பங்களை

பயன்படுத்தக்கூடிய மற்றும் தரத்தில் உயர்ந்த மாம்பழங்களை சந்தைப்படுத்தக்கூடிய மாம்பழங்களை பதனிடும் வலயங்களை தாபிப்பது குறித்த கருத்திட்டத்தின் பிரதான செயற்பாடாகும். அறுவடை செய்தல், கையாளுதல் மற்றும் பொதியிடுதல், கனியவைத்தல், வர்த்தகப் பெயரிடுதல் மற்றும் ஏனைய சந்தைப்படுத்தல் திறமுறைத்திட்டங்கள் என்பன அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களில் உள்ளடங்குகின்றன.

மாம்பழங்களை கையாளும் மற்றும் பதனிடும் 11 நிலையங்கள் அடங்கலாக 2017 ஆம் ஆண்டில், ஓமார்கொல்ல (குருனாகல் மாவட்டம்) மற்றும் பேராதெனிய (கண்டி மாவட்டம்) ஆகிய இடங்களில் 2 மாம்பழங்கள் பதனிடும் வலயங்கள் தாபிக்கப்பட்டன. மேலும் அத்தகைய 06 வலயங்களை தாபிப்பதற்கான பூர்வாங்க செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டன. அவை 2018 ஆம் ஆண்டு முதலாவது காலாண்டின் போது தாபிக்கப்படவுள்ளன. தற்பொழுது ‘**ஓமாரகொல்ல மாம்பழங்கள்** மற்றும் **பேராதெனிய மாம்பழங்கள்**’ என இரண்டு வர்த்தகப் பெயர்களில் தரத்தில் உயர்ந்த மாம்பழங்கள் சந்தைப்படுத்தப்படுகின்றன. நுகர்வோருக்கும் மற்றும் வியாபாரிகளுக்கும் இடையில், இந்த இரண்டு வர்த்தகப் பெயர்களுக்குமுரிய மாம்பழங்களுக்கு அதிகளவான கேள்வி நிலவுவது அவதானிக்கப்பட்டது. குறித்த கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டிலும் தொடரும்.




## b. இலங்கையிலுள்ள பெருமளவான விவசாய நிறுவனங்களில் ஏற்படும் விவசாய உணவுப் பயிர்களின் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைப்பது தொடர்பான பயிற்றுவிப்பாளர்கள் பயிற்சி

உரிய அக்கறையுடைய தரப்புகளுக்கு இடையில் அறிவின்மையானது அறுவடைக்கு பிற்பட்டகால செயற்பாடுகளின் மேம்பாட்டை மட்டுப்படுத்துகின்ற ஒரு காரணியாகும். ஆகையால், அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப பிரிவை அபிவிருத்தி செய்வதில் ஒரு அத்தியாவசிய அங்கமாக விளங்குகின்றது. பல நிறுவனங்களினதும் அரசாங்க விரிவாக்கல்

உத்தியோகத்தர்களினூடாக வருகின்ற அறிவுமூலம் நன்மை பெறுநர்களுக்கான பிரதான அறிவுமூலமாக விளங்குகின்றது. விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்பன இந்த செயற்பாட்டில் ஈடுபடுகின்ற ஆரம்ப அடிப்படை நிறுவனங்களாகும். ஆகையால், அடிப்படை மட்டத்தில் சம்பந்தப்படுகின்ற உத்தியோகத்தர்களின் அறிவை வளர்ப்பது மிக முக்கியமான ஒரு விடயமாகும்.

ஆகையால், இந்த கருத்திட்டத்தின் கீழ், விவசாயத் திணைக்களத்தின் விவசாய போதகர்கள் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் ஆகியோருக்கான பயிற்றுவிப்பாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. குறித்த கருத்திட்டம் 2016 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டு வந்தது. 2017 ஆம் ஆண்டில், இந்த நிறுவகம் 17 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தி, கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 1381 ARPA களுக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளது.

**பேராதெனிய மாங்காய்கள் பதனிடும் வலயத்தை திறந்துவைக்கும் வைபவம்: திகதி 2017.10.09**

**இடதுபக்கத்தில்:** கமத்தொழில் அமைச்சின் (க.அ.) செயலாளர் திரு பீ. விஜேரட்ன, விவசாயத் திணைக்களத்தின் (வி.தி.) பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரொஹான் விஜேகோன், அ.பி.தொ.நி. தலைவர் மற்றும் உத்தியோகத்தர்கள், மற்றும் ஏனைய பிரமுகர்கள் ஆகியோர் நிற்கும் காட்சி

**வலதுபக்கத்தில்:** ‘பேராதெனிய மாங்காய்கள்’ என்ற வர்த்தக பெயரில் விநியோகிக்கப்படுவதற்கு ஆயத்தமாகவுள்ள மாங்காய்களை அமைச்சின் செயலாளர் திரு பீ. விஜேரட்ன பரிசீலித்துப்பார்க்கும் காட்சி



**பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

**இடதுபக்கத்தில்:** அ.பி.தொ.நி. விரிவாக்கல் உத்தியோகத்தர் திரு என். சோமகாந்தன் 2017.02.14 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட பயிற்சி நிலையத்தில் **ARPA** களுக்கு அறுவடைக்கு பின்-தொழில்நுட்பம் பற்றிய ஒரு விரிவுரையை வழங்கும் காட்சி

**வலதுபக்கதில்:** அ.பி.தொ.நி. விரிவாக்கல் உத்தியோகத்தர்களான திரு எம்.எம். ஹேரத் மற்றும் திரு ஜி.டப்ளியூ.எஸ். பத்திரண ஆகியோர் 2017.03.27 ஆம் திகதி குருனாகல் மாவட்ட பொத்துஹெர பயிற்சி நிலையத்தில் **ARPA** களுக்கு அறுவடைக்கு பின்-தொழில்நுட்பம் பற்றிய ஒரு விரிவுரையை வழங்கும் காட்சி

### c. இயற்கையாக பழங்களை கனிய வைக்கும் முறையியலின் அறிமுகம்

இந்த கருத்திட்டம் வர்த்தக அளவிலான தூய பழங்கள் வியாபாரத் தொழிலில் பயன்படுத்துவதற்கென இயற்கையாக பழங்களை கனியவைக்கும் ஒரு முறையியலை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது. பிலின், கெப்பெட்டிய ஆகிய இலைகளின் தூள்கள் மற்றும் இந்த இரண்டு இலை வகைகளினதும் கலவைகள் என்பன எரிவாயு க்ரமொட்டகிராபி வசதியை பயன்படுத்தி எதைலீனின் நிமித்தம் பரிசோதிக்கப்பட்டன. ஆராய்ச்சி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### d. கொய்யாப் பழங்கள் விநியோக மற்றும் பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயற்பாடுகளின் மேம்பாடு

கொய்யா உலர் வலய பிரதேசங்களில் பிரதானமாக பயிரிடப்படும் பிரதான பழப் பயிர்களில் ஒரு பயிராகும். இலங்கையின் காலநிலை மற்றும் ஏனைய காரணிகள் என்பன கொய்யா பயிர்ச் செய்கையில் அதிகளவான விளைச்சலை தருவதில் அதிகளவு அனுகூலமானவையாகும். எனினும், அறுவடைக்கு பிற்பட்டகால அதிக இழப்பு அண்ணளவாக 30-35% என்ற வீதத்தில் காணப்படுகின்றது. தகாத செயன்முறைகளின் பாவனையின் காரணமாக, அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் அதிகளவில் தரம்

குறைவடைகின்றமை மற்றும் அதனுடன் இணைந்த பாதுகாப்பு பிரச்சினைகள் என்பன விவசாய கைத்தொழிலை இலாபம் குறைந்ததாக மாறச்செய்திருந்தது. ஆகையால், அனுராதபுர மாவட்டத்தில், கொய்யா பயிர்ச் செய்கையுடன் தொடர்புடைய விநியோக மற்றும் பெறுமான சங்கிலி சார்ந்த செயற்பாடுகளின் போது பொருத்தமான அறுவடைக்கு பிற்பட்டகால செயன்முறைகளின் பிரயோகத்தை பிரபல்லியப்படுத்துவதற்கான அறிவு மற்றும் உட்கடட்டமைப்பு வசதிகள் என்பவற்றை மேம்படுத்துவதனூடாக கொய்யா விநியோக மற்றும் பெறுமான சங்கிலிகளில் சகல கட்டங்களையும் மேம்படுத்தும் நிமித்தம் குறித்த கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த கருத்திட்டத்தின் கீழ், மூன்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு, 57 நன்மை பெறுநர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இபளோகம மற்றும் புளியங்குளம் ஆகிய பகுதிகளில் கொய்யா பதனிடும் இரண்டு வலயங்கள் தாபிக்கப்படவுள்ளன. இருபத்து ஏழு கையாளுகை அலகுகளும் ஆரம்பிக்கப்பட்டன. தரம் பிரிக்கும் மேசைகள், பொதியிடும் மேசைகள், ப்ளாஸ்டிக் கூடைகள், துருப்பிடிக்காத பெட்டிகள், ஸ்ட்டிகெர்கள், விலையிடும் இயந்திரங்கள், திகதி முத்திரைகள் மற்றும் ஸ்ட்டைரோபோர்ம் வலைகள் என்பன போன்ற வசதிகள் ஒவ்வொரு அலகிலும் உள்ளடங்கியிருக்கும். குறித்த கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.





**இடபக்கத்தில்:** கருத்திட்டத்திலிருந்து நன்மை பெறுநர்களுடன் அ.பி.தொ.நி. மற்றும் விதாதா நிலையங்கள் ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் கலந்துரையாடும் காட்சி

**வலதுபக்கத்தில்:** 2017.11.08 ஆம் திகதி கள விஜயத்தை மேற்கொண்ட குழுவினர். அ.பி.தொ.நி. ஆராய்ச்சி உத்தியோகத்தர் கருத்திட்டத்திலிருந்து நன்மை பெறுநர்களுடன் கலந்துரையாடும் காட்சி

### e. வாழைப் பழங்கள் விநியோக மற்றும் பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயற்பாடுகளின் மேம்பாடு

வாழை உலர் வலய பிரதேசங்களில் பிரதானமாக பயிரிடப்படும் பிரதான பழப் பயிர்களில் ஒரு பயிராகும். இலங்கையின் காலநிலை மற்றும் ஏனைய காரணிகள் என்பன வாழை பயிர்ச் செய்கையில் அதிகளவான விளைச்சலை தருவதில் அதிகளவு அனுகூலமானவையாகும். எனினும், அறுவடைக்கு பிற்பட்டகால தகாத செயன்முறைகளின் பாவனை காரணமாக அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் அதிகளவில் தரம் குறைவடைகின்றமை மற்றும் அதனுடன் இணைந்த பாதுகாப்பு பிரச்சினைகள் என்பன விவசாய கைத்தொழிலை இலாபம் குறைந்ததாக மாறச்செய்திருந்தது. ஆகையால், வாழையின் வருடாந்த உற்பத்தி எறக்குறைய 3.3 மில்லியன் வாழைக் குலைகள் என்ற அளவில் காணப்படுகின்றது. அறுவடைக்கு பிற்பட்டகால கணியளவான வருடாந்த இழப்பு 30% வீதமாகும். இது வருடாந்தம் அண்ணளவாக 0.99 மில்லியன் வாழைக் குலைகள் என்ற அளவுக்கு இழப்பை ஏற்படுத்துகின்றது. இது வருடாந்தம் அண்ணளவாக 1 பில்லியன் ரூபா பெறுமதியான வாழைப் பழங்கள் வீணாகி கொண்டிருப்பதை கருதுகின்றது.



2017.09.06 ஆம் திகதி ராஜாங்கனவில் இடம்பெற்ற வாழை வளர்ப்போரை சென்றுபார்வையிடும் கள விஜயம்
அ.பி.தொ.நி. உத்தியோகத்தர்களும் மற்றும் கருத்திட்டத்திலிருந்து நன்மை பெறுநர்களும் படத்தில் காணப்படுகின்றனர்

ஆகையால், அனுராதபுர மாவட்டத்தில், வாழை பயிர்ச் செய்கையுடன் தொடர்புடைய விநியோக மற்றும் பெறுமான சங்கிலி சார்ந்த செயற்பாடுகளின் போது பொருத்தமான அறுவடைக்கு பிற்பட்டகால செயன்முறைகளின் பிரயோகத்தை பிரபல்லியப்படுத்துவதற்கான அறிவு மற்றும் உட்கடட்டமைப்பு வசதிகள் என்பவற்றை மேம்படுத்துவதனூடாக வாழை விநியோக மற்றும் பெறுமான சங்கிலிகளில் சகல கட்டங்களையும் மேம்படுத்தும் நிமித்தம் குறித்த கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்த கருத்திட்டத்தின் கீழ், ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டு அதில் 21 நன்மை பெறுநர்களுக்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. ராஜாங்கனவில் வாழை பதனிடும் ஒரு வலயம் தாபிக்கப்படவுள்ளது. 12 கையாளுகை அலகுகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. பழங்களை கனியவைக்கும் அறைகள், தரம் பிரிக்கும் மேசைகள், பொதியிடும் மேசைகள், ப்ளாஸ்டிக் கூடைகள், துருப்பிடிக்காத பெட்டிகள், ஸ்ட்டிகெர்கள், விலையிடும் இயந்திரங்கள், திகதி முத்திரைகள் மற்றும் ஸ்ட்டைரோபோம் தட்டுகள் என்பன போன்ற வசதிகள் ஒவ்வொரு அலகிலும் உள்ளடங்கியிருக்கும்.

### f. பபாயாவின் விநியோக மற்றும் பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயற்பாடுகளின் மேம்பாடு

பபாயா உலர் வலய பிரதேசங்களில் பிரதானமாக பயிரிடப்படும் பிரதான பழப் பயிர்களில் ஒரு பயிராகும். இலங்கையின் காலநிலை மற்றும் ஏனைய காரணிகள் என்பன பபாயா பயிர்ச் செய்கையில் அதிகளவான விளைச்சலை தருவதில் அதிகளவு அனுகூலமானவையாகும். எனினும், அறுவடைக்கு பிற்பட்டகால தகாத செயன்முறைகளின் பாவனை காரணமாக அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் அதிகளவில் தரம் குறைவடைகின்ற நிலைமை விவசாய கைத்தொழிலை இலாபம் குறைந்ததாக மாறச்செய்திருந்ததுடன் மரபு ரீதியான விநியோக சங்கிலியிலும் பிரச்சினையை ஏற்படுத்தியிருந்தது. பபாயாவின் வருடாந்த உற்பத்தி எறக்குறைய 26 மில்லியன் பழங்கள் என்ற அளவில் காணப்படுகின்றது. அறுவடைக்கு பிற்பட்டகால கணியளவான வருடாந்த இழப்பு 46% வீதமாகும். இது வருடாந்தம் அண்ணளவாக 11 மில்லியன் பழங்கள் என்ற அளவுக்கு இழப்பை ஏற்படுத்துகின்றது. இது

வருடாந்தம் அண்ணளவாக 300 மில்லியன் ரூபா பெறுமதியான பபாயாக்கள் வீணாகி கொண்டிருப்பதை கருதுகின்றது.



2017.09.28 ஆம் திகதி தம்புத்தேகமவில் நடத்தப்பட்ட பபாயா முன்னோடிக் கருத்திட்டம் தொடர்பான அறிமுக விரிவுரை
பபாயா சேகரிக்கும் குழுக்களுக்கு அ.பி.தொ.நி. உத்தியோகத்தர்கள் மாங்காய் கருத்திட்டத்தின் வெற்றிகரமான கதை பற்றி தெளிவுபடுத்தினர்

ஆகையால், அனுராதபுர மாவட்டத்தில், பபாயாவுடன் தொடர்புடைய விநியோக மற்றும் பெறுமான சங்கிலி சார்ந்த செயற்பாடுகளின் போது பொருத்தமான அறுவடைக்கு பிற்பட்டகால செயன்முறைகளின் பிரயோகத்தை பிரபல்லியப்படுத்துவதற்கான அறிவு மற்றும் உட்கடட்டமைப்பு வசதிகள் என்பவற்றை மேம்படுத்துவதனூடாக பபாயாவின் விநியோக மற்றும் பெறுமான சங்கிலிகளில் சகல கட்டங்களையும் மேம்படுத்தும் நிமித்தம் குறித்த கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. குறித்த கருத்திட்டத்தின் கீழ், இரண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு, 26 நன்மை பெறுநர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. ராஜாங்கன பகுதிகளில் ஒரு பபாயா பதனிடும் வலயம் தாபிக்கப்பட்டு, 12 கையாளுகை அலகுகளும் ஆரம்பிக்கப்பட்டன. பழங்களை கனியவைக்கும் அறைகள், தரம் பிரிக்கும் மேசைகள், பொதியிடும் மேசைகள், ப்ளாஸ்டிக் கூடைகள், துருப்பிடிக்காத பெட்டிகள், ஸ்ட்டிகெர்கள், விலையிடும் இயந்திரங்கள், திகதி முத்திரைகள் மற்றும் ஸ்ட்டைரோபோfம் வலைகள் என்பன போன்ற வசதிகள் ஒவ்வொரு அலகிலும் உள்ளடங்கியிருக்கும்.

## g. இலங்கையில் விவசாய உற்பத்திகளினது விநியோக மற்றும் பெறுமான சங்கிலி முகாமைத்துவம்

விரைவில் அழியக்கூடிய பயிர்களின் பெறுமான சங்கிலி மைய விலை ஏற்றத்தாழ்வு விவசாய கைத்தொழிலுள்ள முக்கிய பிரச்சினைகளில் ஒரு பிரச்சினையாகும். அறுவடை காலத்தில், தானியங்களும் மற்றும் விரைவில் அழியக்கூடிய பயிர்களும் பிரதானமாக விநியோக அளவுக்கு மேலதிகமாக அறுவடை செய்யப்படுவதன் காரணமாக அவற்றின் விலைகள் ஆகக்குறைந்த அடிப்படை விலைகளை விடவும் குறைவடைகின்றன. அதிகளவில் அறுவடைக்கு பிற்பட்டகால

இழப்புகளுக்கு வழிவகுக்கும் விநியோக சங்கிலி வியாபிப்பும் விவசாய உற்பத்திகளின் தரக் குறைவுக்கு காரணமாக அமைகின்றது. விவசாய உற்பத்திகளின் தகாத பகிர்ந்தளிப்பு முறை விவசாய கைத்தொழிலினுள் எதிர்நோக்கப்படும் மற்றுமொரு பிரச்சினையாகும். இது பருவ காலத்தின் போது மிகைகளுக்கும் மற்றும் வருடத்தின் ஏனைய காலப்பகுதியில் பற்றாக்குறைக்கும் வழிவகுக்கின்றது. பகிர்ந்தளிப்பு வலையமைப்பை வலுப்படுத்தி ஒருங்கிணைத்தால் விவசாய கைத்தொழிலில் அநேகமான பிரச்சினைகளை தீர்க்க முடியும். ஆகையால், இலங்கையில் விரைவாக அழியக்கூடிய பயிர்களின் விநியோக சங்கிலியை மீளொழுங்கமைக்கும் நிமித்தம் ஒரு அபிவிருத்தி கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அடிப்படை ரீதியில் பயிர் உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட இரண்டாம்நிலைத் தரவுகள் விவசாயத் திணைக்களம், HARTI நிறுவகம் முதலியன போன்ற அரசாங்க நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்பட்டன. பி.செ. மட்ட பயிர் உற்பத்தித் தரவுகள் பி.செ. அலுவலக தொகை மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் பிரிவுகளிலிருந்து சேகரிக்கப்பட்டன. மேலும், APRA மட்டங்களிலான பயிர் உற்பத்தித் தரவுகள் வினாக்கொத்து நூல்களை பயன்படுத்தி பெற்றுக் கொள்ளப்பட்டன. 12 மரக்கறி வகைகளினதும் மற்றும் தக்காளி, கத்தரிக்காய், கரட்டு, ஸ்னப் பீன், லோங் பீன், ஒக்ரா, புடலங்காய், பாகற்காய், வெள்ளரிக்காய், பீற்றூட்டு, லீஸ், பச்சை மிளகாய், பபாயா, வாழை மற்றும் கொய்யா அடங்கலாக மூன்று பழ வர்க்கங்களினதும் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்பு அளவீடுகள் பற்றி நாட்டின் 10 விநியோக சங்கிலி பிரதேசங்களில் மதிப்பாய்வு செய்யப்பட்டது. மீளொழுங்கமைக்கப்பட்ட விநியோக சங்கிலியில் உற்பத்திப் பகிர்ந்தளிப்பை கண்காணிக்கும் நிமித்தம் 100 GPS ட்ரக்குகளும் மற்றும் தரவு லொக்கர்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

A

**மரக்கறி வகைகளின் நட்டங்கள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு**

**A.** சில்லறையாக அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகள் தொடர்பான ஒரு வினாக்கொத்தை நிரப்புதல்

**B.** ஏற்றியிக்கப்படும் போது எந்திர பாதிப்புகள் தொடர்பான ஆய்வு

**C.** கள ரீதியான இழப்பு மதிப்பீட்டு செயற்பாடு

B



## விரிவாக்கல்

விரிவாக்கல் பிரிவு அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள தனது விரிவாக்கல் நிலையங்களினூடாக தனது தொழில்நுட்ப பரம்பல் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இந்த நிறுவகத்தின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றான கள மட்ட விரிவாக்கல் பணியினூடாக தொழில்நுட்ப பரம்பல் செயற்பாடு 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. கொழும்பு தலைமை அலுவலகத்தில் புதிய விரிவாக்கல் நிலையம் தாபிக்கப்பட்டது.

பின்வரும் பாரியளவில் பயிர்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற பிரதேசங்களில் அமைந்துள்ள எட்டு அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப நிலையங்கள் நாடளாவிய விரிவாக்கல் வலையமைப்பில் உள்ளடங்கும்.

1. அனுராதபுரம் (அனுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய)
2. அம்பன்பொல (குருனாகல், புத்தளம் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய)
3. கண்டி (கண்டி, மாத்தளை, கேகாலை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய)
4. நுவரெலியா (நுவரெலியா, வெலிமட, பதுளை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய)
5. அம்பாறை (அம்பாறை, மொனராகல், மட்டக்களப்பு மகாவலி 'சி' முறைமையின் பாகம் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய)
6. அம்பாந்தோட்டை (அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, எம்பிலிபிட்டிய ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய)
7. கிளிநொச்சி (கிளிநொச்சி, வவுனிய, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய)
8. கொழும்பு (கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய) புதிய விரிவாக்கல் நிலையம்



## தொழில்நுட்ப பரிமாற்றல் செயற்பாடுகளின் நிமித்தம் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய வேறுபட்ட துறைகள்

a) விவசாய பயிர்களில் ஏற்படும் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைத்தல்

b) களஞ்சியப்படுத்தும் முறையியல்களுக்கான தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்

c) அரிசி, பருப்பு வகைகள் மற்றும் ஏனைய தானியங்கள் என்பவற்றை பதனிடுதல்

d) வாசனைப் பொருட்களை பதனிடுதல்

e) பழ வர்க்கங்களுக்கும் மற்றும் மரக்கறி வகைகளுக்கும் பெறுமதி சேர்த்தல்

f) அரிசி மற்றும் பருப்பு மைய உற்பத்திகளை தயாரித்தல்

g) இலங்கையில் மனிதனின் போஷாக்கும் மற்றும் மனிதனின் உணவு பழக்கவழக்கங்களும் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்

விவசாய விரிவாக்கல் (விவசாய ஆலோசனை சேவைகள் எனவும் அழைக்கப்படும்) விவசாய உற்பத்திகளை ஊக்குவித்தல், உணவு பாதுகாப்பை அதிகரித்தல், கிராமிய மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல், மற்றும் விவசாயத்தை வறுமை ஒழிப்பு பொருளாதார வளர்ச்சியின் இதயமாக ஊக்குவித்தல் ஆகிய கருமங்களில் முக்கியமான ஒரு பங்கை வகிக்கின்றது.

தற்பொழுது 7 விரிவாக்கல் நிலையங்களில் நாடளாவிய தொழில்நுட்ப பரிமாற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்பொழுது 7 விரிவாக்கல் நிலையங்களில் நாடளாவிய தொழில்நுட்ப பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படுகின்றன

மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில், விவசாயிகள், சேகரிக்கும் தரப்புகள், வர்த்தகர்கள், மற்றும் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் விரிவாக்கல் ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஏனைய கல்வி நிறுவகங்களின் மாணவர்கள் ஆகியோரை இலக்காகக்கொண்டு பல விரிவாக்கல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டமை விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகளில் ஒரு செயற்பாடாகும். இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த நிறுவகத்தினால் ஒவ்வொரு வருடமும் நடத்தப்பட்டு வருகின்றன. தானியங்கள், நவதானியங்கள், கிழங்கு வகைகள், நார் வகைகள், பழ வர்க்கங்கள் மற்றும் மரக்கறி வகைகள் என்பவற்றின் அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப பிரிவில், அரச மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளினதும் நிறுவனங்களின் பணியாட்கள் மற்றும் உற்பத்தித் தரப்புகள், பதனிடும் தரப்புகள் மற்றும் வியாபாரிகள் முதலிய தரப்புகளின் அறிவை இற்றைப்படுத்துவதில், அ.பி.தொ.நி. பயிற்சி சார்ந்த செயற்பாடுகள் இலக்குக்கொண்டுள்ளன.

## பயிற்சிகள்

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வரும் இரண்டு வகுதிகளின் கீழ் நடத்தப்பட்டன. இந்த நிறுவகத்தில் நடத்தப்படும் அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் களத்தில் நடத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என குறிப்பீடு செய்யப்படுகின்றன. இந்த சகல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் அக்கறையுடைய தரப்புகளினது தேவையின் அடிப்படையில் காணப்படுகின்றன. இவை பயிற்சி வழங்கப்படும் நன்மை பெறுநர்களின் பயிற்சி சார்ந்த தேவையின் நிமித்தம் உதவும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

i. வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
ii. வதிவிடம் சாராத பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

### வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அனுராதபுர ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தில் நடத்தப்பட்டன. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 61 குறுங்கால வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் போது, பல அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப பிரிவுகளில் 2036 பேர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட பயிற்சிகளின் விபரங்கள் கீழ்காணும் உருப்படம் 1 இல் தரப்பட்டுள்ளன.

இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் விவசாய உற்பத்திகளின் விநியோக மற்றும் பெறுமான சங்கிலிகளிலுள்ள சகல அக்கறையுடைய தரப்புகளிலும் இலக்குக் கொள்ளப்பட்டு காணப்பட்டன.




விவசாயிகள் / பெண் விவசாயிகள், சேகரிக்கும் தரப்புகள், ஏற்றியிறக்கும் தரப்புகள், மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் / வர்த்தகர்கள் மற்றும் பதனிடும் தரப்புகள் முதலிய தரப்புகள் முக்கியமான அக்கறையுடைய தரப்புகளாக காணப்பட்டன. மேலும், இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அரசாங்க உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்ப பல்லூரி மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கான பயிற்றுவிப்பாளர் அம்ச பயிற்சியின் கீழும் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அறுவடைக்கு பின்-தொழில்நுட்பம், தொழில்முயற்சி அபிவிருத்தி, இழப்புகள் குறைத்தல், உற்பத்தித் தர மேம்பாடு மற்றும் நடபடிமுறை, அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப இயந்திர இயக்க பராமரிப்பு முதலிய அம்சங்கள் ஆகிய அம்ச விடயங்களில் இலக்குக்கொள்ளப்பட்டு காணப்பட்டன.

| **குழு** | **விபரம்** | **பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை** | **பயிலுநர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| A | விவசாயிகள், பெண் விவசாயிகள், கமக்காரர் அமைப்புகளின் உறுப்பினர்கள் | 02 | 50 |
| B | கருத்திட்ட நன்மை பெறுநர்கள் மற்றும் சிறு/நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்கள் | 20 | 478 |
| D | அரச, கூட்டுறவு, தனியார் துறைகளினதும் மற்றும் அ.சா.நி. நிறுவனங்களினதும் விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் | 09 | 256 |
| E | இரண்டாம்நிலை பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விவசாய | 30 | 1281 |

| | | | |
|---|---|---|---|
| | கல்லூரிகளினதும் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளினதும் மாணவர்கள் | | |
| | **மொத்தம்** | **61** | **2036** |

## வதிவிடம் சாராத/கள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் களத்திலேயே நடத்தப்படுகின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அனுராதபுரத்திலுள்ள ஆ.அ. நிலையத்தினாலும் மற்றும் அ.பி.தொ.நி. விரிவாக்கல் நிலையங்களினாலும் நடத்தப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 110 கள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் மற்றும் செய்துகாண்பிப்புகளும் நடத்தப்பட்டு, இவற்றின் போது 2962 தனிநபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.




**2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பயிலுநர் வகுதிகள்**

விவசாய உற்பத்தி விநியோக மற்றும் பெறுமான சங்கிலிகளின் அக்கறையுடைய தரப்புகளை நோக்கி இலக்குக் கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதானமாக விவசாயிகள் / பெண் விவசாயிகள், சேகரிக்கும் தரப்புகள், ஏற்றியிறக்கும் தரப்புகள், மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள்/ வர்த்தகர்கள் மற்றும் பதனிடும் தரப்புகள் முதலிய தரப்புகளில் இலக்குக் கொள்ளப்பட்டிருந்தன. அறுவடைக்கு பின்-தொழில்நுட்பம், தொழில்முயற்சி அபிவிருத்தி, இழப்புகள் குறைத்தல், உற்பத்தித் தர மேம்பாடு மற்றும் நடபடிமுறை, அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப இயந்திர இயக்க பராமரிப்பு முதலிய அம்சங்கள் இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| குழு | விபரம் | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பயிலுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **A** | விவசாயிகள், பெண் விவசாயிகள், கமக்காரர் அமைப்புகளின் உறுப்பினர்கள் | 70 | 1690 |
| **B** | கருத்திட்ட நன்மை பெறுநர்கள் மற்றும் சிறு/நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்கள் | 18 | 454 |
| **C** | விவசாய உற்பத்திகளை சேகரிக்கும் தரப்புகள், ஏற்றியிறக்கும் தரப்புகள் மற்றும் வியாபாரிகள் | 07 | 228 |
| **D** | விவசாய உற்பத்திகளை பதனிடும் தரப்புகள் | 03 | 18 |
| **E** | அரச, கூட்டுறவு, தனியார் துறைகளினதும் மற்றும் அ.சா.நி. நிறுவனங்களினதும் விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் | 09 | 294 |
| **F** | இரண்டாம்நிலை பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விவசாய கல்லூரிகளினதும் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளினதும் மாணவர்கள் | 02 | 253 |
| **G** | வெதுப்பக உரிமையாளர்கள் | 01 | 18 |
| | **மொத்தம்** | **110** | **2962** |

இந்த நன்மை பெறுநர்களில் பலர் இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் அவர்களுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்றனர். பெற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப அறிவினூடாக அறிவு மேம்பாடு, உற்பத்திகளின் தர மேம்பாடு, வருமானம் ஈட்டல், கிராமிய ஊக்குவிக்கு மற்றும் ஏனைய பல நன்மைகள் அடையப்பட்டன. இது, விவசாயத் துறையில் உள்நாட்டு உற்பத்திகளின் தர மேம்பாட்டிற்கும் மற்றும் இழப்புகள் குறைவதற்கும் பங்களிக்கின்றது. இது உணவு பாதுகாப்பு நிரலில், தேசிய அபிவிருத்தியில் மட்டுப்படுத்துகின்ற முக்கிய காரணிகளில் ஒரு காரணியாகும். மேலும், இது கைத்தொழில் அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி மற்றும் மேம்பட்ட வாழ்க்கைத் தரங்கள் என்பவற்றுக்கு பங்களித்திருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தமது கைத்தொழில்களை ஆரம்பித்திருந்த / அபிவிருத்தி செய்திருந்த சில நன்மை பெறுநர்கள் கீழே பட்டியல்படுத்தப்பட்டுள்ளனர்.

| இல. | பெயர் | முகவரி | பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் |
|---|---|---|---|
| 1 | ஆர்.எம்.ஐ. தயானி | கட்டலாவ, மினுவங்கெட்டே | மரக்கறி சொசேஜ் உற்பத்தி |
| 2 | டப்ளியூ.எம்.எம். டப்ளியூ. வர்ணசூரிய | இத்தமல்பிட்டிய, மொலவ | அரிசி மைய உற்பத்திகள் |
| 3 | சி. சமரகோன் | அகுருவெல, பதியதலாவ | அரிசி மைய உற்பத்திகள் |
| 4 | ஏ.கே. கமகே | இலக்கம் 57, வஜிர ஒழுங்கை, ஹவாயெளிய | அரிசி மைய உற்பத்திகள் |
| 5 | கே.என். அபேரட்ன | எஸ்ஏஎம் சூபர் இன்டர்நெஷனல் ப்ரைவட் லிமிற்றட், திதுல | அரிசி மைய உற்பத்திகள் (சர்வ - போஷனை) |
| 6 | ஆர்.எம். ஜயதிலக்க | கட்டகதுற, வலபனே | நவதானியங்கள் மைய உற்பத்திகள் |
| 7 | கே.டீ.ஆர். குமார | 225/4/1,பொல்வகா ஜனபதய, அம்பாறை | வாசனைப் பொருட்கள் மைய உற்பத்திகள் |
| 8 | எம். ரட்நாயக்க | 55, மாவுன்னேவெல ஒழுங்கை, பதியதலாவ | அரிசி மைய உற்பத்திகள் |
| 9 | ஆா.ஜி.பி. அத்தநாயக்க | 30/A/259, கொக்நஹர | அரிசி ஆலைகளை நவீனப்படுத்தல் |
| 10 | பி.ஜி. சந்திரலாதா | 30/192, மாயாதுன்ன, அம்பாறை | எலுமிச்சை மைய உற்பத்திகள் |
| 11 | டப்ளியூ. மனோஜ் | 8/24, ரஜகம, வீரகொட | வாசைனப் பொருட்கள் மற்றும் பொதியிடுதல் |
| 12 | எல்.என். லியனஆராச்சி | 255/6/A எடதுவாவ, பேராதெனிய | பழ வர்க்கங்களை கனியவைக்கும் மேம்பட்ட முறையியல்கள் |
| 13 | டப்ளியூ.ஜி.ரீ.பி. சன்ஜீவ | 137/B/, ஓவல, கிரிபத்கும்புர | பழ வர்க்கங்களை கனியவைக்கும் மேம்பட்ட முறையியல்கள் |
| 14 | கே.எம். குணசேக்கர | புலவல டமேபிட்டிய, மஹஓயா | அரிசி ஆலைகளை நவீனப்படுத்தல் |
| 15 | டப்ளியூ. மனோஜ் ஹர்ஷக்க | 8/24, ரஜகம | வாசனைப் பொருட்கள் மைய உற்பத்திகள் |
| 16 | டீ.எம்.ஏ.எச். குமார | 5/15, பிலப்பிட்டிய, கிரிபத்கும்புர | பழ வர்க்கங்களை கனியவைக்கும் மேம்பட்ட முறையியல்கள் |

| | | | |
|---|---|---|---|
| 17 | டீ.ஜி. அருண | 394/A, போகஹகந்த, ஹல்லொளுவ | பழ வர்க்கங்களை கனியவைக்கும் மேம்பட்ட முறையியல்கள் |
| 18 | டப்ளியூ.எம். புஷ்பகுமாரி | உடவேவதன்ன, மத்துரட்ட | அரிசி மாவு உற்பத்தி |
| 19 | சூலானி சமரகோன் | அகருவெல்ல, பதியபெலெல்ல | அரிசி மாவு உற்பத்தி |
| 20 | ஜே.டப்ளியூ. சந்தியாகுமாரி | வாசனா, நிக்கவெவ, மொரகொல்லாகம | அரிசி மாவு உற்பத்தி |

## அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப இயந்திரங்கள் பற்றிய சான்றிதழ் பாடநெறிகள்

எமது நிறுவகத்தின் பொறியியல் பிரிவு வழமையாக அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப இயந்திரங்கள் பற்றிய பாடநெறிகளை நடத்தியது. 2017 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய அத்தகைய பாடநெறிகள் பற்றிய விபரங்கள் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| **இல.** | **திகதி** | **விபரம்** |
|---|---|---|
| 01 | 21.02.2017 | தரத்தில் உயர்ந்த அரிசி மாவு உற்பத்தி பற்றிய சான்றிதழ் பாடநெறி |
| 02 | 28.03.2017 | அரிசி பதனிடும் இயந்திரத்தின் இயக்க பராமரிப்பு பற்றிய சான்றிதழ் பாடநெறி |
| 03 | 30.05.2017 | தரத்தில் உயர்ந்த அரிசி மாவு உற்பத்தி பற்றிய சான்றிதழ் பாடநெறி |
| 04 | 02.08.2017 | அரிசி பதனிடும் இயந்திரத்தின் இயக்க பராமரிப்பு பற்றிய சான்றிதழ் பாடநெறி |
| 05 | 25.10.2017 | தரத்தில் உயர்ந்த அரிசி மாவு உற்பத்தி பற்றிய சான்றிதழ் பாடநெறி |
| 06 | 26.10.2017 | தரத்தில் உயர்ந்த அரிசி மாவு உற்பத்தி பற்றிய சான்றிதழ் பாடநெறி |
| 07 | 14.02.2017 | தரத்தில் உயர்ந்த அரிசி உற்பத்தி பற்றிய சான்றிதழ் பாடநெறி |

அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை இயக்குவதற்கான நபர்களின் திறன்களை அபிவிருத்தி செய்வதகுரிய பாடநெறிகள் ஏதுவும் கிடைக்கக்கூடியதாகவில்லை. ஆகையால், அ.பி.தொ.நி. அரிசி ஆலை தொடர்பான NVQ மட்டம் 3 மற்றும் 4 ஆகிய பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டு வருகின்றது.

## உள்ளகப் பொறித்தொகுதி/கைத்தொழில் பயிற்சி

மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில், கீழ்காணும் மாணவர்களுக்கு எமது நிறுவகத்தில் பயிலுநர்களாக பயிற்சி பெறுவதற்கான வசதிகள் செய்து வழங்கப்பட்டன.

| இல. | பெயர் | நிறுவகம் | பயிற்சி | காலம் |
|---|---|---|---|---|
| 01 | சி.ஏ. குமாரசிறிவர்த்தன | ரஜரட்டை பல்கலைக்கழகம் | கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 2017/02/20 - 2017/03/17 |
| 02 | எச்.பி.பீ.ஜி. சேனாரட்ன | ரஜரட்டை பல்கலைக்கழகம் | கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 2017/02/20 - 2017/03/17 |
| 03 | பி.ஜி. லக்ஷுமிகா ப்ரியதர்ஷனி | தொழில்நுட்ப கல்லூரி | விவசாய கள உதவியாளர் | 2017/07/17 - 2018/01/16 |
| 04 | கே.எம்.பி.ஜி.எஸ்.எம். கே. நவரட்ன | தொழில்நுட்ப கல்லூரி | விவசாய கள உதவியாளர் | 2017/07/17 - 2018/01/16 |
| 05 | பி.எஸ்.எம். பிரேமதிலக்க | தொழில்நுட்ப கல்லூரி | விவசாய கள உதவியாளர் | 2017/07/17 - 2018/01/16 |
| 06 | ஆர்.டப்ளியூ.எம்.எஸ். வி. பொல்கொட்டுவ | தொழில்நுட்ப கல்லூரி | விவசாய கள உதவியாளர் | 2017/07/17 - 2018/01/16 |
| 07 | பி.ஏ.என். வீரகோன் | தொழில்நுட்ப கல்லூரி | விவசாய கள உதவியாளர் | 2017/07/17 - 2018/01/16 |
| 08 | இ.எம்.எம்.டீ. ஏக்கநாயக்க | தொழில்நுட்ப கல்லூரி | விவசாய கள உதவியாளர் | 2017/07/17 - 2018/01/16 |
| 09 | பி.பீ.இ.எம். திஸாநாயக்க | தொழில்நுட்ப கல்லூரி | விவசாய கள உதவியாளர் | 2017/07/17 - 2018/01/16 |
| 10 | எம்.பி.ஜி.ஐ.எம். விஜேரட்ன | தொழில்நுட்ப கல்லூரி | உணவு தொழில்நுட்பம் (டிப்ளோமா) | 2017/08/03 - 2018/02/02 |
| 11 | எச்.ஆர்.எம். ரணசிங்க | யாழ்ப்பாண பல்கலைக்கழகம் | விவசாய பொறியியல் (அறுவடைக்கு பின்-பொறியியல்) | 2017/08/08 - 2018/08/31 |
| 12 | கே.ஏ.எம்.எஸ். பண்டார | ரத்மலான பல்கலைக்கழக கல்லூரி | உணவு தொழில்நுட்பம் (டிப்ளோமா) | 2017/11/15 - 2017/12/15 |

| | | | | |
|---|---|---|---|---|
| **13** | ஏ.எம்.டீ.கே. அபேசிங்க | ரத்மலான பல்கலைக்கழக கல்லூரி | உணவு தொழில்நுட்பம் (டிப்ளோமா) | 2017/11/15 - 2017/12/15 |
| **14** | எல்.பீ.எம்.எல்.எம். குணரட்ன | ரஜரட்டை பல்கலைக்கழகம் | விவசாய விரிவாக்கல் | 2017/12/04 - 2017/12/29 |
| **15** | எம்.எம்.எம். குணரட்ன | ரஜரட்டை பல்கலைக்கழகம் | விவசாய பொறியியல் | 2017/12/04 - 2017/12/29 |
| **16** | எம்.பி.டீ.டீ.வை. பண்டார | ரஜரட்டை பல்கலைக்கழகம் | விவசாய பொறியியல் | 2017/12/04 - 2017/12/29 |
| **17** | சி.எம். பயாஸ் | ரஜரட்டை பல்கலைக்கழகம் | விவசாய பொறியியல் | 2017/12/04 - 2017/12/29 |
| **18** | இ.வி.யூ.பி. கருணாரட்ன | ரஜரட்டை பல்கலைக்கழகம் | தாவர விஞ்ஞானம் | 2017/12/04 - 2017/12/29 |
| **19** | டப்ளியூ.எம்.டீ. விக்ரமகுமாரி | ரஜரட்டை பல்கலைக்கழகம் | தாவர விஞ்ஞானம் | 2017/12/04 - 2017/12/29 |
| **20** | பி.ஏ.எச். சஜீவனி | ரஜரட்டை பல்கலைக்கழகம் | தாவர விஞ்ஞானம் | 2017/12/04 - 2017/12/29 |

## உசாதுணை மற்றும் ஏனைய சேவைகள்

அரச மற்றும் தனியார் ஆகிய இரண்டு துறைகளினதும் நிறுவனங்கள், அறுவடைக்கு பிற்பட்டகால செயற்பாடுகளில் நேரடியாக அல்லது மறைமுகமாக ஈடுபடுகின்ற கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் என்பன அ.பி.தொ.நி. ஆலோசனையையும் மற்றும் ஏனைய சேவைகளையும் தொடர்ச்சியாக நாடியுள்ளன. புதிய பல பதனிடும் பொறித்தொகுதிகளை தாபிக்கும், ஏற்கெனவேயிருக்கின்ற பொறித்தொகுதிகளை நவீனப்படுத்தும், மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்களும், உணவு பதனிடும் தரப்புகளும் தமது நாளாந்த செயற்பாடுகளில் எதிர்நோக்குகின்ற தொழில்நுட்ப பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் இத்தகைய சேவைகளை வழங்கியதனூடாக, இந்த நிறுவகத்தால் 10 எண்ணிக்கைக்கும் அதிகமான உசாதுணை சேவைகளை வெற்றிகரமாக வழங்க முடிந்தது.

### "களஞ்சியப் பொருட்கள் பெறுகை - பொதுத் திறைசேரியின் நிதி அபிவிருத்தித் திணைக்களம்

2016 ஆம் ஆண்டில், அ.பி.தொ.நி. பொதுத் திறைசேரியின் நிதி அபிவிருத்தித் திணைக்களத்ினது 'களஞ்சியப் பொருட்கள் பெறுகை கருத்திட்டத்திற்கான'

ஆலோசனை தரப்பாக தொழிற்பட்டுள்ளது. இந்த ஆலோசனை சேவை 2017 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. இந்தக் கருத்திட்டத்தின் கீழ், முன்கூட்டி சுத்தப்படுத்தல் மற்றும் உலர்த்தல் ஆகிய வசதிகளுடன் களஞ்சியசாலைகள் எம்பிலிபிட்டிய, மெதிரிகிரிய மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் தாபிக்கப்பட்டன.



## முக்கிய உசாதுணை சேவைகள் பற்றிய விபரங்கள்

| இல. | வாடிக்கையாளர் தரப்புகளின் பெயர்கள் | சேவைகள் |
|---|---|---|
| 01 | ஜப்பான் பீஸ் வின்ட்ஸ் | கந்தளாய் கள தரத்தில் உயர்ந்த அரிசி உற்பத்தி |
| 02 | கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் | அரைக்கும் இயந்திரங்களுக்கான தொழில்நுட்ப அறிக்கை - வட மாகாணம் |
| 03 | கவுதுல்ல ப.நோ.கூ.ச.க. நெல்லை அவித்து அரிசி பதனிடும் நிலையம் | அரிசி ஆலை நவீனப்படுத்தல் பற்றிய அறிக்கை |

| | | |
|---|---|---|
| 04 | பள்ளுகஸ்தமன ப.நோ.கூ.ச.க. | அரிசி ஆலை நவீனப்படுத்தல் பற்றிய அறிக்கை |
| 05 | பள்ளுகஸ்தமன ப.நோ.கூ.ச.க. | அரிசி மாவு ஆலை நவீனப்படுத்தல் பற்றிய அறிக்கை |
| 06 | குருனாகல் ப.நோ.கூ.ச.க. | அரிசி ஆலை பற்றிய விலைமதிப்பீட்டு அறிக்கை |
| 07 | வ/ப இலங்கை மகளிர் அபிவிருத்தி சேவைகள் கூட்டுறவு சங்கம் | பருப்பு வகை தானியங்களை உரிப்பது தொடர்பான ஒரு ஆலோசனை நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல் |
| 08 | கராச்சி தெற்கு ப.நோ.கூ.ச.க. | உணவு பதனிடும் நிலையம் பற்றிய தொழில்நுட்ப அறிக்கை |
| 09 | நிதி அமைச்சின் களஞ்சியப் பொருட்கள் பெறுகை நிதியிடுகை கருத்திட்டத்தின் (WHRFP) பணிப்பாளர் | புத்தள மற்றும் மன்னார் ஆகிய இடங்களிலுள்ள களஞ்சியசாலைகள் தொடர்பில் ஆலோசனை சேவைகள் வழங்கல் |
| 10 | களங்குட்டி அரிசி ஆலை உணவு மேம்பாட்டு சபை | அரிசி ஆலை பற்றிய அறிக்கை |

## ஆய்வுகூட சேவைகள்



இந்த நிறுவகம் தனியார் மற்றும் அரச துறை நிறுவனங்களிலிருந்து தனக்கு கிடைக்கும் மாதிரிகளின் பௌதீக, இரசாயன மற்றும் உயிரியல் தர பன்பம்சங்களை பகுப்பாய்வு செய்வதனூடாக நாட்டில் விவசாய/உணவு உற்பத்திகளின் தரக் கட்டுப்பாட்டை பிரயோகிப்பதில் இன்றியமையாத பங்கை வகித்தது. அ.பி.தொ.நி. நன்கு அபிவிருத்தி அடைந்த இரசாயன பகுப்பாய்வு வசதிகளைக் கொண்டுள்ளது. குறிப்பாக, இரசாயன பகுப்பாய்வு ஆய்வுகூடத்தில் தானியக்க உருஞ்சி ஸ்பெக்டோமீற்றர், எரிவாயு க்ரமெட்டோகிராபி மற்றும் அதிக செயல்திறன் வாய்ந்த திரவ க்ரமெட்டோகிராபி, எரிவாயு க்ரமெட்டோகிராபி திணிவு ஸ்பெக்ட்ரோமீற்றர் முதலிய கருவிகள் நிறைந்து காணப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில், இந்த வசதிகளை பயன்படுத்தி, உலோகப் பதார்த்தங்களினால் அதிகளவில் ஏற்படும் பழுதடைவுகளின் நிமித்தம் 500 உணவு மாதிரிகள் பகுப்பாய்வு

செய்யப்பட்டன. மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் அக்கறையுடைய தரப்புகளுக்கு பல சேவைகள் வழங்கப்பட்டன. அ.பி.தொ.நி. தனது ஆய்வுகூட வசதிகளை வெளித்தரப்புகளுக்கு வழங்க ஆரம்பித்துள்ளது மாத்திரமன்றி தனது ஆய்வுகூட வசதிக்கான மதிப்பையும் பெற்று வருகின்றது.

**கண்காட்சிகள்**

இந்த நிறுவகம் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட பல கண்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியது. இத்தகைய கண்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொண்டதனூடாக, இந்த நிறுவகம் நாட்டில் பல அக்கறையுடைய தரப்புகளுக்கு தொழில்நுட்பத்தை பரம்பல் செய்வதற்கு எதிர்பார்த்தது. பங்குபற்றிய கண்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரங்கள் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| திகதி | நிகழ்ச்சித்திட்டம் | இடம் | நிறுவனம் |
|---|---|---|---|
| 12-14/02/2017 | ஹரித்த சிஹினய | குருனாகல் | கைத்தொழில் சேவைகள் பணியகம் |
| 03-04/02/2017 | வித்யா தர்ஷி வித்யா தாக்ஷன கண்காட்சி | நொச்சியாகம | நொச்சியாகம விதாயா தர்ஷி கல்லூரி |
| 17-19/03/2017 | திகாமடுலு நவோதய | அம்பாறை | அம்பாறை மாவட்ட செயலக அலுவலகம் |
| 31/03/2017-04/04/2017 | திரசார யுகயக் | கொழும்பு, BMICH | கமத்தொழில் அமைச்சு |

## ஆற்றல் கட்டியெழுப்பல் மற்றும் உற்பத்தித்திறன் அபிவிருத்தி

இந்த நிறுவகம் தனது ஊழியர்களின் அறிவை வளர்ப்பதற்கு முக்கியமாக அக்கறை செலுத்துகின்றது. நிறுவகத்தின் பின்வரும் உத்தியோகத்தர்கள் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறுவடைக்கு பின்-தொழில்நுட்பம் தொடர்பான பிரிவுகளில் பட்டப்பின்படிப்புப் பட்டத்தை பின்பற்றியதுடன், அவர்கள் பயிற்சிகளையும் பெற்றனர்.

**பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (தொடர்ச்சி)**

பொறியியலாளர் ரீ.எம்.ஆர். திஸாநாயக்க
உயிரியல் முறைமை பொறியியல் PhD
விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PGIA)
பேராதெனிய பல்கலைக்கழகம்

பொறியியலாளர் (திருமதி) டீ.எம்.எஸ்.பி. பண்டார
உயிரியல் முறைமை பொறியியல் PhD
விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PGIA)
பேராதெனிய பல்கலைக்கழகம்

திருமதி ஆர்.எம்.ஆர்.கே. ரட்நாயக்க
தாவர விஞ்ஞான PhD
விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PGIA)
பேராதெனிய பல்கலைக்கழகம்

**குறுங்கால பயிற்சி/கூட்டங்கள்/மாநாடுகள் (வெளிநாட்டுப் பயிற்சி)**

சீன அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி முதல் யூன் மாதம் 29 ஆம் திகதி வரை சீனாவில் நடத்தப்பட்ட அறுவடைக்கு பின்-தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் திரு டப்ளியூ.எம்.சி.பீ. வாசல பங்குபற்றினார்.

உலக உணவுகள் நிகழ்ச்சித்திட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-22 ஆம் திகதி வரை இந்தியாவின் புது தில்லியில் நடைபெற்ற 'அரிசியை பலப்படுத்தல்' என்ற தலைப்பிலான உலக உணவுகள் நிகழ்ச்சித்திட்ட அனுபவ ரீதியான விஜயத்தில் பொறியியலாளர் ரீ.எம்.ஆர். திஸாநாயக்க பங்குபற்றினார்.

உலக உணவுகள் நிகழ்ச்சித்திட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18-28 ஆம் திகதி வரை சீனாவின் பீஜிங் நகரத்தில் நடைபெற்ற 'சிறுபற்றுநில விவசாயிகளுக்கான அறுவடைக்கு பின்-பதனிடுகை மற்றும் களஞ்சியப்படுத்துகை' ஆகியன தொடர்பான உலக உணவுகள் நிகழ்சசித்திட்டத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பொறியியலாளர் ரீ.எம்.ஆர். திஸநாயக்க பங்குபற்றினார்.

சீனா அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி முதல் யூலை மாதம் 27 ஆம் திகதி வரை சீனாவில் நடைபெற்ற மரக்கறிப் பயிர்ச் செய்கை மற்றும் பதனிடுகை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் திரு கயான் திலக்கரட்ன பங்குபற்றினார்.

சீனா அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி முதல் யூலை மாதம் 27 ஆம் திகதி வரை சீனாவில் நடைபெற்ற மரக்கறிப் பயிர்ச் செய்கை மற்றும் பதனிடுகை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் திருமதி ஹசித்த ரட்னவீர பங்குபற்றினார்.

சீனா அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி முதல் யூலை மாதம் 27 ஆம் திகதி வரை சீனாவில் நடைபெற்ற மரக்கறிப் பயிர்ச் செய்கை மற்றும் பதனிடுகை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் டப்ளியூ.பி.எஸ். பத்திரன பங்குபற்றினார்.

## விருதுகளும் மதிப்புகளும்

### 2017 ஆம் ஆண்டில் கிடைத்த விருதுகள்

மேசை திராட்சைகளின் (*Vitisvinifera* L.) cv. தரத்தை பேணுகின்ற மற்றும் பாவனை காலத்தை நீடிக்கின்ற 'அறுவடைக்கு பிற்பட்டகால பொலியமைன்கள் பதனிடும்' முறை என்ற தலைப்பில் 'அறுவடைக்கு பின்-உயிரியல் மற்றும் தொழில்நுட்பம்' ஆகிய தொணிப்பொருளில் 2015 ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட தொகுதி.91, pp 57-63 எனும் ஆவணத்திற்கான விஞ்ஞான வெளியீட்டின் நிமித்தம் ஜனாதிபதி விருது - விதையற்ற சுவாலை

### 2017 ஆம் ஆண்டில் கிடைத்த ஆக்கவுரிமைகள்

வாசனைப் பொருட்களை அரைப்பதற்கான நீராவி நீர் குளிராக்கி (EWC) முறையியல், இலங்கை தேசிய புலமைச்சொத்துக்கள் அலுவலகத்தினால் சர்வதேச ஆக்கவுரிமை வகுதி (IPC) A47J 42/00 சான்றிதழ் கிடைத்தது. 'மரக்கறி கேக் கலவைக்கு' இலங்கை தேசிய புலமைச்சொத்துக்கள் அலுவலகத்திலிருந்து மற்றுமொரு ஆக்கவுரிமை கிடைத்தது.

### பொறியியலாளர் ரீ.எம்.ஆர். திஸாநாயக்க

- இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்ட பொறியியல் பிரிவுக் குழுவின் தலைவர்
- இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தின் சபைக்கான உறுப்பினர்
- 82 மாவட்ட டோஸ்மாஸ்டெர் இன்டர்நெஷனல் பிராந்திய H3 பிரிவு H பிராந்திய பணிப்பாளர்
- இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீட சபை வெளிவாரி உறுப்பினர்

### பொறியியலாளர் எச்.எம்.ஏ.பி. ரட்நாயக்க

- இலங்கையின் பொறியியலாளர்கள் சங்க விவசாய மற்றும் பெருந்தோட்ட பொறியியல் பிரிவுக் குழுவின் குழு உறுப்பினர்
- நெல்லுக்கும் மற்றும் அரிசிக்குமான நியமங்களை வகுத்தமைப்பது பற்றிய இலங்கை நியமங்கள் நிறுவகத்தின் தொழிற்படு குழு

உறுப்பினர் மற்றும் விவசாய பொறிமுறைப்படுத்தலுக்கான கொள்கைகள் தயாரித்தல் தேசிய குழுவின் உறுப்பினர்

**கலாநிதி நிலந்தி விஜேவர்த்தன**

- இலங்கை SLAAS நிறுவக நெறிப்படுத்தல் குழு உறுப்பினர்
- பபாயாவுக்கான நியமங்களை வமைத்தமைப்பது தொடர்பான இலங்கை நியமங்கள் நிறுவகத்தின் தொழிற்படு குழு உறுப்பினர்

## ஆக்கவுரிமைகள், வெளியீடுகள் மற்றும் விருதுகள்

### வெளியீடுகள்

| வெளியீடுகள் | துறைக்கான தொழில்நுட்பம் / பங்களிப்பு |
|---|---|
| ஆர்.எம்.ஆர்.என்.கே. ரத்நாயக்க, டப்ளியூ.ஏ.எம். தவுந்தசேக்கர, எச்.எம். ஆரியரட்ன, எம்.வை.யூ. கனேஹேனகே (2017). பாகற்காயின் (*MomordicacharantiaL.*) போஷனை தரம் தொடர்பான ஒரு இயற்கை சிலிக்கன் (Si) மூலமாக அரிசியின் தவிட்டினது அடிப்படை பிரயோக பயன்கள். தூய மற்றும் பிரயோக விஞ்ஞானம் பற்றிய சர்வதேச மாநாடு - களணி பல்கலைக்கழகம். | இரசாயன பங்கசு கொல்லிக்கான பிரதியீட்டுப் பதார்த்தம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. |
| டீ.எம்.எஸ்.பி. பண்டார, கே.எஸ்.பி. அமரதுங்க, ரீ.எம்.ஆர். திஸாநாயக்க, சி.ஆர். குணவர்த்தன (2017). வாசனைப் பொருட்களின் அரைக்கும் தன்மையை மேம்படுத்துவது தொடர்பான நீராவி நீர் குளிராக்கி (EWC) அரைக்கும் முறைமை மாதிரி அபிவிருத்தி. சர்வதேச விஞ்ஞான சஞ்சிகை மற்றும் ஆராய்ச்சி வெளியீடு. | வாசனைப் பொருட்கள் கைத்தொழில் அபிவிருத்தியின் நிமித்தம் புதிய விஞ்ஞான பெனோமியம் அறிமுகப்படுத்தப் பட்டது. |
| சி.ஏ.கே. திஸாநாயக்க, டப்ளியூ.எம்.சி.பீ. வாசல, சி.ஆர். குணவர்த்தன, எம்.எம். ஹேரத் (2017). இலங்கையில் பாரிய பொருளாதார நிலையங்களிலுள்ள மரக்கறி மொத்த விற்பனையாளர்களின் நிமித்தம் ப்ளாஸ்டிக் கூடைகளை அறிமுகப்படுத்துதல்: மக்கள் ஏன் அதனை மறுக்கின்றனர்: அக்கறையுடைய வரண்ட பிராந்திய வீட்டுத் தோட்டப் பயிர் வளர்ப்பு தர முகாமைத்துவம் மற்றும் அறுவடைக்கு பின்-தொழில்நுட்பம் பற்றிய iv-வது சர்வதேச மாநாட்டு நடவடிக்கைகள். 2017 ஏப்ரல் 6-8, கண்டி, ஸ்ரீ லங்கா pp. 27. | இலங்கையில் விரைவாக அழியக்கூடிய மரக்கறி வகைகளின் பொருட்களின் விநியோக சங்கிலிக்கு ப்ளாஸ்டிக் கூடைகளை அறிமுகப்படுத்துவது பற்றிய முக்கிய மதிப்பீடு. இந்த மதிப்பீட்டில் பதிப்பாசிரியர்கள் பெற்ற அனுபவம் |

| | |
|---|---|
| | எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவும். |
| டப்ளியூ.எம்.சி.பீ. வாசல, சி.கே. பெனரகன்ம, சி.ஏ.கே. திஸாநாயக்க, என். விஜேவர்த்தன, கே.எச். சாரனந்த (2017). வளிமண்டல வெப்பநிலையில் 'புளி வாழையை' கனி வைப்பதிலுள்ள தாமதம் பற்றிய வித்தியாசமான கரைசல்கள் மற்றும் 1-MCP வெளிப்பாட்டு நேரங்கள் (1-மிதைல் சைக்லோ ப்ரொபேன்) ஆகியவற்றின் பயன். அக்கறையுடைய வரண்ட பிராந்திய வீட்டுத் தோட்டப் பயிர் வளர்ப்பு தர முகாமைத்துவம், அறுவடைக்கு பின்-தொழில்நுட்பம் பற்றிய iv -வது சர்வதேச மாநாட்டு நடவடிக்கைகள். 2017 ஏப்ரல் மாதம் 6-8, கண்டி, ஸ்ரீ லங்கா pp. 52 | கனிய வைப்தன் பொருத்தப்பாடு சாத்தியம் குறித்த துறைக்கு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இது பழ வர்க்கங்களை சில்லறையாக சந்தைப்படுத்துவதில் காணப்படுகின்ற கணிசமான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவும். |
| என். விஜேவர்த்தன, டப்ளியூ.எம்.சி.பீ. வாசல, எம். திஸாநாயக்க (2017). நுவலியாவிலுள்ள லீஸ்களை (Allium porum) இலங்கையில் தம்புள்ள மரக்கறி விநியோக சங்கிலி நிலையத்திற்கு தொகையளவில் பொதியிட்டு ப்ரொடோடைப் மரத்தாலான பொதி உறைகளில் அடைத்து எடுத்துச் செல்வதற்கான பொருத்தப்பாடு பற்றிய மதிப்பீடு. அக்கறையுடைய வரண்ட பிராந்திய வீட்டுத் தோட்டப் பயிர் வளர்ப்பு தர முகாமைத்துவம், அறுவடைக்கு பின்-தொழில்நுட்பம் பற்றிய iv -வது சர்வதேச மாநாட்டு நடவடிக்கைகள். 2017 ஏப்ரல் மாதம் 6-8, கண்டி, ஸ்ரீ லங்கா pp. 53. | இதன் ஆய்வு முடிவு லீஸ்களை எடுத்துச் செல்வதற்கான புதிய பொதியிடும் முறையியலை அறிமுகப் படுத்துகின்றது. தற்பொழுது லீஸின் அறுவடைக்கு பிற்பட்ட கால இழப்பு அதிகமாக காணப்படுகின்றது. சரியான பொதியிடும் முறையியல் இல்லாமையானது அத்தகைய இழப்புகளுக்குரிய பிரதான காரணமாக இனங்காணப் பட்டுள்ளது. |
| டீ. சமரதிவாக்கார, எச்.சி. விக்ரமஆராச்சி, ஜே. ஈஸ்வரா (2017). 'உள்நாட்டு சிற்றரஸ் அவுரன்டிபோலியா சுவிங்கல் அறுவடை முதிர்ச்சி பற்றிய அனல் பிரித்தெடுத்தல் பயன்கள். அக்கறையுடைய வரண்ட பிராந்திய வீட்டுத் தோட்டப் பயிர் வளர்ப்பு தர முகாமைத்துவம், அறுவடைக்கு பின்-தொழில்நுட்பம் பற்றிய iv -வது சர்வதேச மாநாட்டு நடவடிக்கைகள். 2017 ஏப்ரல் மாதம் 6-8, கண்டி, ஸ்ரீ லங்கா pp. 53. | எலுமிச்சையின் சரியான முதிர்ச்சி கட்டத்தை இனங்காணும் முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. |

## ஆக்கவுரிமைகளும் விருதுகளும்

- சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் கலாநிதி (திருமதி) நிலந்தி விஜேவர்த்தன அவரது ஆராய்ச்சியின் நிமித்தம் அவர் தயாரித்த 'மரக்கறி கேக் கலவை' தொடர்பில் அவருக்கு ஆக்கவுரிமை கிடைத்தது.



01. எந்திரப் பொறியியலாளர் (திருமதி) டீ.எம்.எஸ்.பி. பண்டார அவரது ஆராய்ச்சியின் நிமித்தம் அவர் அறிமுகப்படுத்திய 'வாசனைப் பொருட்களை வெப்பமூட்டி அரைப்பதற்கான குளிர் முறையியல்' தொடர்பில் அவருக்கு ஆக்கவுரிமை கிடைத்தது. இவருக்கு இலங்கை தேசிய புலமைச்சொத்துக்கள் அலுவலகத்தினால் சர்வதேச ஆக்கவுரிமை வகுதி (IPC) A47J 42/00 சான்றிதழும் வழங்கப்பட்டது.



- சர்வதேச ஆராய்ச்சி வெளியீடுகளின் நிமித்தம் ஒரு ஜனாதிபதி விருது கிடைத்தது. இரண்டு ஆராய்ச்சி வெளியீடுகள் சர்வதேச முன்னோடி மீளாய்வு சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டன.

## சமூக, நலன்புரி மற்றும் சமய செயற்பாடுகள்

### சமூக மற்றும் நலன்புரி செயற்பாடுகள்

இந்த நிறுவகம் ஊழியர்களின் உறவுகளை கட்டியெழுப்புவதற்கும் மற்றும் ஊழியர்களுக்கும் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கும் மத்தியில் நல்ல





எண்ணத்தை வளர்ப்பதற்கும் என

தொடர்ந்தும் தனது நலன்புரி சார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. ஜனாதிபதியின் அலுவலகத்தினது அறிவுரைகளின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி ஊழியர்கள் தினம் கொண்டாடப்பட்டது. அதே நாள் மாலை நேரத்தில், நிறுவகத்தின் நலன்புரி சங்கம் அதன் ஊழியர்களையும் மற்றும் ஊழியர்களின் குடும்பங்களையும் ஒன்றிணைத்து விளையாட்டு நிகழ்வுகளை நடத்தியது.

'தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு' அதற்கு இணையாக நீண்டகால சேவையை பாராட்டும் நிகழ்வும் நடத்தப்பட்டது. இந்த நிறுவகத்திற்கு 25 ஆண்டுகளுக்கும் அதிக கால சேவையை வழங்கிய ஊழியர்களுக்கு 50,000.00











ரூபா பெறுமதியான காசோலைகள் மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் வழங்கி வைக்கப்பட்டன.

## சமய செயற்பாடுகள்

நெல் சந்தைப்படுத்தல் சபையின் அரிசி பதனிடுதல் மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கான ஒரு வாரிசு நிறுவனமாகிய அ.பி.தொ.நி. 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப நிறுவகம் என்ற ரீதியில் தனது 17-வது தாபிப்பு நிறைவு ஆண்டை கொண்டாடுகின்றது. இந்த நிகழ்வை முன்னிட்டு குழு கருத்தை அதிகரிப்பதற்கும் மற்றும் பிரதேசத்தில் மக்களை வலையமைத்து ஒன்றிணைப்பதற்கும் என 'சர்வ ராத்திரி பிரித் சஜ்ஜயனய' சமய வழிபாடு ஏற்பாடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் நடத்தப்பட்டது.







## மனித வளங்கள்

நிறுவகத்தின் நிரந்தரப் பதவியணியினர் எண்ணிக்கை 156 ஆக இருந்தது. இந்த மொத்த எண்ணிக்கையில் 52% வீதமானோர் தொழில்நுட்ப பிரிவுகளை சேர்தவர்கள். 48% வீதமானோர் துணைப் பிரிவுகளை சேர்ந்தவர்கள். ஆராய்ச்சி, பொறியியல் மற்றும் விரிவாக்கல் என்பன இந்த நிறுவகத்தின் பிரதான பிரிவுகளாகும்.

**2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள விபரம்**

| பதவியணியினர் | மொத்த ஆளணி | நிரப்பப்பட்டுள்ள ஆளணி | ஆளணியிலுள்ள வெற்றிடம் |
|---|---|---|---|
| பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 02 | - | 02 |
| பிரதான எந்திரப் பொறியியலாளர் | 01 | 01 | - |
| பிரதான விரிவாக்கல் உத்தியோகத்தர் | 01 | - | 01 |
| சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 03 | 02 | 01 |
| சிரேஷ்ட எந்திரப் பொறியியலாளர் | 02 | 02 | - |
| சிரேஷ்ட விரிவாக்கல் உத்தியோகத்தர் | 01 | 01 | - |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 14 | 14 | - |
| எந்திரப் பொறியிலாளர் | 06 | 02 | 04 |
| விரிவாக்கல் உத்தியோகத்தர் | 05 | 03 | 02 |
| பொருளியலாளர் | 01 | - | 01 |
| **மொத்தம்** | **36** | **25** | **11** |

| இல. | பதவியணியினர் | மொத்த ஆளணி | நிரப்பப்பட்டுள்ள ஆளணி | ஆளணியிலுள்ள வெற்றிடம் |
|---|---|---|---|---|
| **விஞ்ஞான பதவியணியினர்** | | | | |
| 01 | ஆ.அ. பதவியணியினர் | 36 | 25 | 11 |
| | செலுத்தப்படாத சம்பளம் | 3,451.80 | 19,555.83 |
| | துணை உற்பத்திகள் விற்பனை | 34,398.00 | 6,420.00 |
| | தண்டப்பணங்கள் | - | 980.00 |
| | | **4,411,173.77** | **3,812,964.27** |
| 21.1 | **இயந்திராதிகள் உற்பத்தி வர்த்தக இலாப மற்றும் நட்ட கணக்கு** | | |
| | இயந்திராதிகள் விற்பனை - கொதி கலன்கள் | - | |
| | இயந்திராதிகள் விற்பனை - அரிசி குற்றும் இயந்திரங்கள் | 275,000.00 | 275,000.00 |
| | 2017.01.01 ஆம் திகதியிலுள்ள மூலப்பொருட்களின் நிலுவை | 7,291.00 | |
| | கூட்டுக: கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் | 248,416.50 | |
| | | 255,707.50 | |
| | 2017.12.31 ஆம் திகதியிலுள்ள மூலப்பொருட்களின் நிலுவை | 4,821.00 | |
| | **இயந்திராதிகள் உற்பத்தி ஆகுசெலவு C/F** | **250,886.50** | |
| | 2017.01.01 ஆம் திகதியிலுள்ள இயந்திராதிகளின் நிலுவை | 519,745.00 | |
| | இயந்திராதிகள் உற்பத்தி ஆகுசெலவு B/F | 250,886.50 | |
| | | **770,631.50** | |
| | கூட்டுக: கொள்வனவு செய்யப்பட்ட இயந்திராதிகள் | - | |
| | | **770,631.50** | |
| | 2017.12.31 ஆம் திகதியிலுள்ள இயந்திராதிகளின் நிலுவை | 444,745.00 | |
| | **உற்பத்தி ஆகுசெலவு - இயந்திராதிகள் விற்பனை** | **325,886.50** | **325,886.50** |
| | **இலாபம்** | | **(50,886.50)** |

| | | 2017 (ரூ.) | 2016 (ரூ.) |
|---|---|---|---|
| **21.2** | **விடுதி தங்குமிட வசதி வருமானம்** | | |
| | வருமானம் | 2,872,795.00 | |
| | செலவு | - | |
| | | | **2,872,795.00** |
| **21.3** | **விடுதி வருமானம் - உணவு மற்றும் பானங்கள்** | | |
| | வருமானம் | 2,278,339.75 | |
| | செலவு | 1,957,125.00 | |
| | | | **321,214.75** |
| **21.4** | **பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்** | | |
| | வருமானம் | 1,040,858.25 | |
| | செலவு | 338,938.14 | |
| | | | **701,920.11** |
| **21.5** | **உசாதுணை கட்டணங்கள்** | | |
| | வருமானம் | 421,926.00 | |
| | செலவு | 207,500.40 | |
| | | | **214,425.60** |
| **21.6** | **இயந்திராதிகள் சான்றிதழ் பயிற்சிகள் மூல வருமானம்** | | |
| | இயந்திராதிகள் சான்றிதழ் பயிற்சிகள் மூல வருமானம் | 171,300.00 | |
| | இயந்திராதிகள் சான்றிதழ் பயிற்சிகள் தொடர்பான செலவுகள் | 65,706.00 | |
| | | | **105,594.00** |
| **21.7** | **ஆய்வுகூட சேவைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்** | 5,350,000.00 | |
| | செலவுகள் | 1,956,120.81 | |
| | | | **3,393,879.19** |
| **21.8** | **வட்டி வருமானம்** | | |
| | தே.சே.வ. 1-0005-04-9129-2 - அனுராதபுரம் | 32,026.84 | |
| | தே.சே.வ. 1-0001-07-3208-7 - கொள்ளபிட்டிய | 276,354.24 | |
| | தே.சே.வ. 2-0001-21-28187 - கொள்ளுபிட்டிய | 968,082.20 | |
| | தே.சே.வ. 2-0001-21-28195 - கொள்ளுபிட்டிய | 968,082.20 | |
| | தே.சே.வ. 2-0001-21-28179 - கொள்ளுபிட்டிய | 968,082.20 | **3,212,627.68** |
| | **நிறுத்திவைத்தல் வரி** | | |
| | தே.சே.வ. 1-0005-04-9129-2 - அனுராதபுரம் | - | |
| | தே.சே.வ. 1-0001-07-3208-7 - கொள்ளுபிட்டிய | 22,108.33 | |
| | தே.சே.வ. 2-0001-21-28187 - கொள்ளுபிட்டிய | 77,446.58 | |
| | தே.சே.வ. 2-0001-21-28195 - கொள்ளுபிட்டிய | 77,446.58 | |
| | தே.சே.வ. 2-0001-21-28179 - கொள்ளுபிட்டிய | 77,446.58 | 254,448.07 |
| | **வங்கி தேறிய வட்டி வருமானம்** | | **2,958,179.61** |
| | **ஏனைய வட்டி வருமானம்** | | |
| | விஷேட முற்பணங்கள் வட்டி | 8,044.64 | |
| | இடர் கடன் வட்டி | 365,470.41 | |
| | விஷேட கடன் வட்டி | 24,560.55 | **398,075.60** |
| | | | **3,356,255.21** |

| | | 2017 (ரூ.) | 2016 (ரூ.) |
|---|---|---|---|
| | **செலவுகள்** | | |
| 23 | **வேதனங்கள், சம்பளங்கள், ஊழியர் நன்மைகள்** | | |
| | சம்பளங்கள், வேதனங்கள் - நிரந்தர ஊழியர்கள் | 51,011,942.84 | 45,536,057.66 |
| | அமைய ஊழியர்கள் | 2,373,201.93 | 1,773,394.11 |
| | ஊ.சே.நி. | 7,566,985.92 | 6,692,816.26 |
| | ஊ.ந.நி. | 1,850,184.04 | 1,673,205.17 |
| | வாழ்க்கைப் படிகள் | 11,719,110.00 | 10,774,496.51 |
| | மேலதிகநேர மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் | 2,239,985.03 | 1,950,364.71 |
| | ஏனைய கொடுப்பனவுகள் | 296,000.00 | 280,252.00 |
| | ஆராய்ச்சி சார்ந்த கொடுப்பனவுகள் | 1,907,874.68 | 1,219,645.37 |
| | ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் | 525,545.66 | 220,893.98 |
| | பணிக்கொடை | 8,538,818.05 | 4,182,511.22 |
| | | **88,029,648.15** | **74,303,636.99** |
| | | | |
| 24 | **பயன்பட்ட விநியோகங்களும் நுகர்வுப்பொருட்களும்** | | |
| | அச்சீடும் காகிதாதிகளும் | 1,245,989.50 | 1,019,126.97 |
| | அலுவலக தேவைகளும் நானாவித செலவுகளும் | 1,906,826.55 | 1,089,656.68 |
| | ஆராய்ச்சிக் கருத்திட்டங்களுக்கான நுகர்வுப்பொருட்கள் | 835,707.49 | 908,417.52 |
| | விடுதி மற்றும் சமையலறை இயக்கப் பராமரிப்பு செலவுகள் | 290,184.00 | 813,696.00 |
| | ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் | 1,104,491.41 | 859,958.06 |
| | வாகனங்களின் இயக்கப் பராமரிப்பு செலவுகள் | 3,582,411.13 | 2,293,875.94 |
| | வாகனங்கள் பராமரிப்பு | 3,441,558.10 | 2,880,608.54 |
| | கட்டிடங்கள் பராமரிப்பு | 2,888,032.91 | 2,369,949.62 |
| | இயந்திராதிகள் பராமரிப்பு | 338,237.42 | 756,793.14 |
| | | **15,633,438.51** | **12,992,082.47** |
| | | | |
| 25 | **தேய்மானம்** | | |
| | கட்டிடங்கள் | 2,893,918.88 | 2,909,335.81 |
| | பொறித்தொகுதிகள், இயந்திராதிகள் | 436,017.96 | 456,164.06 |
| | அலுவலக உபகரணங்கள் | 308,574.35 | 316,434.17 |
| | ஆய்வுகூட மற்றும் ஆராய்ச்சி உபகரணங்கள் | 8,009,214.76 | 7,794,561.89 |
| | ஏனைய உபகரணங்கள் | 1,647,416.75 | 448,250.25 |
| | தளபாடங்களும் பொருத்துக்களும் | 680,271.25 | 680,683.49 |
| | மின்சார மற்றும் ஏனைய பொருத்துக்கள் | 51,603.70 | 40,248.70 |
| | கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் | 1,118,240.00 | 1,162,539.96 |
| | தொலைபேசிகள் மற்றும் பொருத்துக்கள் | 13,303.05 | 27,484.67 |
| | வாசிகசாலை நூல்கள் | 40,944.10 | 36,052.10 |
| | வாகனங்கள் | 2,556,000.00 | 2,556,000.00 |
| | | **17,755,504.80** | **16,427,755.10** |

| | | 2017 (ரூ.) | 2016 (ரூ.) |
|---|---|---|---|
| **26** | **ஏனைய செலவுகள்** | | |
| | உள்நாட்டு பிரயாண செலவுகள் | 850,944.25 | 806,249.17 |
| | வெளிநாட்டு பிரயாண செலவுகள் | 1,399,555.32 | 1,098,749.95 |
| | ஊழியர்களுக்கான தேநீர் | 761,153.50 | 451,006.29 |
| | வார இதழ்கள், சஞ்சிகைள், செய்திப்பத்திரிகைகள் | 73,240.00 | 403,684.50 |
| | கருத்தரங்குகள் | 80,000.00 | 105,357.50 |
| | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | - | 805,182.65 |
| | பாழுதுபோக்குகள் | 687,597.11 | 368,378.98 |
| | ஒப்பந்த தொழிலாளர் செலவு | 208,500.00 | 81,600.00 |
| | நலன்புரி செலவு | - | 4,000.00 |
| | காப்புறுதி மற்றும் அனுமதிப்பத்திரங்கள் | 563,403.65 | 442,223.96 |
| | தொலைத்தொடர்பு | 2,592,792.70 | 1,438,057.61 |
| | தபால் கட்டணங்கள் | 111,811.00 | 101,216.00 |
| | மின்சாரக் கட்டணங்கள் | 1,836,336.26 | 1,502,466.77 |
| | தண்ணீர் கட்டணங்கள் | 1,370,884.12 | 557,184.76 |
| | வாடகை | 1,224,956.00 | 301,748.00 |
| | வாகனங்களுக்கான குத்தகை வாடகை | 1,209,800.00 | |
| | வரிகள் மற்றும் கட்டணங்கள் | - | 288,960.36 |
| | கண்காட்சிகள் | 19,969.40 | 12,445.00 |
| | வெளியீடுகள் | 189,750.00 | 7,000.00 |
| | மனித வளங்கள் அபிவிருத்தி | 375,598.65 | 415,022.98 |
| | கணக்காய்வு கட்டணங்கள் | 250,000.00 | 250,000.00 |
| | சட்டமுறையான கட்டணங்கள் | - | - |
| | சீருடைக் கொடுப்பனவுகள் | 72,003.00 | 224,000.00 |
| | | **13,878,294.96** | **9,664,534.48** |
| **27** | **கருத்திட்டங்கள் சார்ந்த செலவுகள்** | | |
| | SAARC தொடர்பான செலவுகள் | - | 1,238,309.79 |
| | NSF கருத்திட்டம் தொடர்பான செலவுகள் | 546,093.12 | 788,605.01 |
| | மகாவலி கருத்திட்டம் தொடர்பான செலவுகள் | - | 465,392.73 |
| | அபிவிருத்தி கருத்திட்டம் தொடர்பான செலவுகள் - TOT | 947,481.00 | 5,131,321.78 |
| | அபிவிருத்தி கருத்திட்டம் தொடர்பான செலவுகள் - மாம் பழங்கள் | 14,008,503.28 | 8,663,004.26 |
| | அபிவிருத்தி கருத்திட்டம் தொடர்பான செலவுகள் - ஓர்கனிக் | 4,980.00 | 4,435,193.20 |
| | அபிவிருத்தி கருத்திட்டம் தொடர்பான செலவுகள் - விநியோக சங்கிலி | 676,832.00 | |
| | வாழைப் பழங்கள் கருத்திட்டம் தொடர்பான செலவுகள் | 2,514,191.75 | |
| | பபாயா கருத்திட்டம் தொடர்பான செலவுகள் | 3,648,754.95 | |
| | கொய்யா பழங்கள் கருத்திட்டம் தொடர்பான செலவுகள் | 4,622,924.76 | |
| | பச்சை மிளகாய் கருத்திட்டம் தொடர்பான செலவுகள் | 484,181.95 | |
| | சாப்பிடக்கூடிய எண்ணெய் கருத்திட்டம் தொடர்பான செலவுகள் | 545,729.51 | |
| | கண்காட்சிகள் - BMICH | 273,313.42 | 99,123.80 |
| | கண்காட்சிகள் - அம்பாறை | | 194,951.29 |
| | கண்காட்சிகள் - கமக்காரர் வாரம் - தம்புள்ள | | 1,907,500.00 |
| | வப் மங்குல நிகழ்ச்சி தொடர்பான செலவுகள் | 2,278,360.00 | |
| | | **30,551,345.74** | **22,923,401.86** |
| **28** | **நிதி சார்ந்த ஆகுசெலவுகள்** | 29,109.37 | 37,611.64 |
| | | **29,109.37** | **37,611.64** |

| | | | | 2017 (ரூ.) | 2016 (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 29 | திரண்ட மிகை சீராக்கல்களிலிருந்து வரும் காசுப் பாய்ச்சலுக்கான பலன் | | | | |
| | திரண்ட மிகைக்கு வரவுவைக்கப்பட்ட தொகை | | | 654,005.00 | |
| | திரண்ட மிகைக்கு பற்றுவைக்கப்பட்ட தொகை | | | (434,150.51) | |
| | | | | 219,854.49 | |
| | காசுப் பாய்ச்சலை பாதிக்காத தொகை | | 48,920.00 | | |
| | | | (4,892.00) | 44,028.00 | |
| | காசுப் பாய்ச்சல் அதிகரிப்பு | | | **175,826.49** | |
| 30 | **கொடுமதிகள்** | | | | |
| | முற்பணங்கள் | **17.1** | | 1,779,328.14 | 1,345,752.48 |
| | அட்டுறு செலவுகள் | **17.2** | | 50,591,650.37 | 4,814,931.77 |
| | வைப்புத்தொகைகள் | **17.3** | | 413,070.00 | 556,070.00 |
| | பிடித்துவைத்தல் தொகைகள் | **17.4** | | 811,009.28 | 1,321,763.94 |
| | கடன்கள் கட்டுப்பாட்டு கணக்கு | **17.5** | | 11,346,409.04 | 8,962,284.04 |
| | முற்பண கிடைப்பனவுகள் | **17.6** | | 386,625.63 | 386,625.63 |
| | | | | **65,328,092.46** | **17,387,427.86** |
| | **2017.01.01 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | | | 17,387,427.86 | 24,304,636.98 |
| | **கழிக்குக: 2017.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | | | 65,328,092.46 | 17,387,427.86 |
| | **பொறுப்புக்களிலுள்ள அதிகரிப்பு / குறைவு** | | | **47,940,664.60** | **(6,917,209.12)** |
| 31 | **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | | |
| | **பணிக்கொடைக்கான நிதியேற்பாடு** | | | | |
| | **2017.01.01 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | **16** | | 28,198,189.00 | 27,606,601.15 |
| | **கழிக்குக: 2017.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | | | 33,945,662.45 | 28,198,189.00 |
| | **நடைமுறையலலாத பொறுப்புக்களிலுள்ள அதிகரிப்பு / குறைவு** | | | **5,747,473.45** | **591,587.85** |
| 32 | **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| | பொருட்கள் இருப்பு | **12** | | 1,274,712.95 | 1,181,080.20 |
| | முற்பணங்கள் | **13** | | 321,176.07 | 208,021.50 |
| | வைப்புத்தொகைகள் | **14** | | 1,446,372.27 | 675.00 |
| | பற்றுக்கள் கட்டுப்பாட்டு கணக்கு | **11.1** | | 491,927.39 | 491,927.39 |
| | அட்டுறு வருமானம் | **11.2** | | 48,429,997.89 | 2,120,432.87 |
| | | | | **51,964,186.57** | **4,002,136.96** |
| | **2017.01.01 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | | | 4,002,136.96 | 3,313,845.25 |
| | **கழிக்குக: 2017.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | | | 51,964,186.57 | 4,002,136.96 |
| | **நடைமுறைச் சொத்துக்களின் பொறுப்புக்களிலுள்ள அதிகரிப்பு / குறைவு** | | | **47,962,049.61** | **688,291.71** |
| 33 | **சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்** | | | | |
| | குறித்த ஆண்டு காலப்பகுதியிலுள்ள சேர்வுகள் | | | 41,381,739.50 | 18,629,436.14 |
| | சொத்துக்களின் மீள்விலைமதிக்கப்பட்ட தொகை | | | (39,815,000.00) | (11,593,784.71) |
| | குறித்த ஆண்டு காலப்பகுதியில் காசுப் பாய்ச்சலினூடாக அதிகரித்த சொத்துக்கள் | | | **1,566,739.50** | **7,035,651.43** |

| | | 2017 (ரூ.) | 2016 (ரூ.) |
|---|---|---|---|
| 34 | **முதலீகள் - வைப்புத்தொகைகள்** | | |
| | தேசிய சேமிப்பு வங்கி 2- 0001- 21-28195 - கொள்ளுபிட்டிய | 10,000,000.00 | 10,000,000.00 |
| | தேசிய சேமிப்பு வங்கி 2- 0001- 21-28187 - கொள்ளுபிட்டிய | 10,000,000.00 | 10,000,000.00 |
| | தேசிய சேமிப்பு வங்கி 2- 0001-21-28179 - கொள்ளுபிட்டிய | 10,000,000.00 | 10,000,000.00 |
| | | **30,000,000.00** | **30,000,000.00** |
| | இடர் கடன் | 8,920,746.12 | 9,640,525.33 |
| | விஷேட கடன் | 695,061.55 | 542,460.96 |
| | | **9,615,807.67** | **10,182,986.29** |
| | **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | **39,615,807.67** | **40,182,986.29** |
| | **2017.01.01 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 40,182,986.29 | 60,177,402.96 |
| | **கழிக்குக: 2017.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 39,615,807.67 | 40,182,986.29 |
| | **நடைமுறையல்லாத சொத்துக்களிலுள்ள அதிகரிப்பு / குறைவு** | **(567,178.62)** | **(19,994,416.67)** |
| 35 | **குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள காசும், காசும் ஒப்புரவுகளும்** | | |
| | **வங்கியிலுள்ள காசு** | | |
| | இலங்கை வங்கி - டொரிங்டென் | 5,795,171.51 | 4,271,183.18 |
| | மக்கள் வங்கி - அனுராதபுரம் | 17,459,429.11 | 3,442,336.91 |
| | சில்லறை காசு | 5,000.00 | 5,000.00 |
| | தேசிய சேமிப்பு வங்கி 1- 0005- 04-9129-2- அனுராதபுரம் | 766,106.46 | 700,085.52 |
| | தேசிய சேமிப்பு வங்கி 1- 0001- 07-3208-7- கொள்ளுபிட்டிய | 5,778,243.83 | 3,519,184.10 |
| | **2017.01.01 ஆம் திகதியிலுள்ள காசும், காசு ஒப்புரவுகளும்** | **29,803,950.91** | **11,937,789.71** |
| 36 | **குறித்த ஆண்டு இறுதியிலுள்ள காசும், காசும் ஒப்புரவுகளும்** | | |
| | **வங்கியிலுள்ள காசு** | | |
| | இலங்கை வங்கி - டொரிங்டென் | 4,780,171.51 | 5,795,171.51 |
| | மக்கள் வங்கி - அனுராதபுரம் | 13,215,927.11 | 17,459,429.11 |
| | சில்லறை காசு | 5,000.00 | 5,000.00 |
| | தேசிய சேமிப்பு வங்கி 1- 0005- 04-9129-2- அனுராதபுரம் | 798,133.30 | 766,106.46 |
| | தேசிய சேமிப்பு வங்கி 1- 0001- 07-3208-7- கொள்ளுபிட்டிய | 9,062,621.68 | 5,778,243.83 |
| | **2017.12.31 ஆம் திகதியிலுள்ள காசும், காசு ஒப்புரவுகளும்** | **27,861,853.60** | **29,803,950.91** |

| | | |
|---|---|---|
| 37 | பழங்களுக்கும் மற்றும் மரக்கறி வகைகளுக்கும் அறுவடைக்கு பின்னர் ஏற்படும் இழப்புகளை குறைக்கும் நோக்கில் அவற்றை பொதியிட்டு ஏற்றியிறக்குவதை மேம்படுத்தும் முகமாக 50% மானிய விலையில் விவசாயிகளுக்கும், வர்த்தகர்களுக்கும் மற்றும் சேகரிப்போருக்கும் விநியோகிப்பதற்காக ப்ளாஸ்டிக் கூடைகள் கொள்வனவு செய்யப்பட்டன. எனினும், அந்த கூடைகள் அவர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை. ஆகையால், 2017.12.31 ஆம் திகதியிலுள்ள ஆகுசெலவில் அந்த ப்ளாஸ்டிக் கூடைகள் கையிருப்பிலுள்ளன. | **177,463.10** |

38 நெல் சந்தைப்படுத்தும் சபையிலிருந்து சொத்துக்கள் 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆம் திகதி அ.பி.தொ. நி. நிறுவகத்திற்கு மாற்றப்பட்டன. எனினும், அவ்வாறு மாற்றப்பட்ட நெ.ச.ச. சொத்துக்களின் பெறுமானங்கள் கணக்குகளில் காட்டப்பட்டன. அவ்வாறு மாற்றப்பட்ட சொத்துக்கள் நெ.ச.ச. சபையின் மாற்றப்பட்ட சொத்துக்களாகும். மாற்றப்பட்ட சொத்துக்கள் மீள்விலைமதிக்கப்பட்டு வருகின்றன.

39 எமது வாடிக்கையாளர் தரப்புகளில் ஒரு தரப்பாகிய கே.டீ. ஏர்பெர்ட் என்ட் சன்ஸ் ஹோல்டிங் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம் அனுராதபுர அலுவலகத்தில் கட்டிடத்தை நிர்மாணிக்கும் பொருட்டு இரண்டு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. அந்த நிறுவனம் ஒப்பந்தத்தில் அதிகாரமளிக்கப்படாத சில மேலதிக வேலைகளை செய்துள்ளது. அந்த நிறுவனம் மேலதிகமாக செய்த வேலைகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டது. அதன் பின்னர், அந்த நிறுவனம் ரூ.30,806,979.10 தொகையை செலுத்துமாறு கோரி 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி இரண்டு கோரல் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது. இவற்றில் ஒரு கோரல் கடிதம் மேலதிக பணிகளின் கொடுப்பனவாக ரூ.5,329,344.62 தொகைக்கானதாகவும் மற்றும் மற்றையகடிதம் ரூ.5,477,634.48. தொகைக்கானதாகவும் காணப்படுகின்றன. மொத்தக் கொடுப்பனவு ரூ.10,806,979.10 தொகையாகும். அதன் நட்டமும் பாதிப்புகளும் ரூ.20,000,000.00 தொகையாகும். அந்த நிறுவனம் ரூ.30,806,979.10 மொத்த தொகையை 14 நாட்களுக்குள் செலுத்துமாறும், தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்திருந்தது. எனினும், நாம் அதற்கு பதிலளிக்கவில்லை. அந்த நிறுவனம், கோரல் கடிதத்திற்கு இணங்க, எமக்கு எதிராக எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

40 அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப நிறுவகத்தின் காட்டப்பட்ட ஆரம்ப மூலதனங்கள் ரூ.500,000,000.00 தொகையாகும்.

මගේ අංකය
எனது இல.
My No. } என்சீபி/ஏபி/ஈ/ஐபிஎச்ரீ/01/2017/14

ඔබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2018 நவம்பர் 04

தலைவர்

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகம்

**அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று தலைவருக்கு 2018 ஒக்தோபர் 16 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. **நிதிக்கூற்றுக்கள்**

2.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - இலக்கம் 02**

(i) மீளாய்வாண்டின் போது வாகனங்களின் விற்பனைகளிலிருந்தான ரூபா 6,057,930 காசு வருமானம் நியமத்தின் 25(ஆ) பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கொள்வனவுக்கான காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 26,753,844 தொகையொன்று பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், காசு மூலம் செலுத்துகை மேற்கொள்ளப்படாத ரூபா 9,803,454 தொகையொன்றை அது உள்ளடக்கியிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - இலக்கம் 07**

---

நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்தம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்படு ஆயட்காலத்தினை மீளாய்வு செய்திராமையின் காரணமாக சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் ரூபா 63,410,396 கிரயமுடைய சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தன. ஆகையினால், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - இலக்கம் 03 இன் பிரகாரம் மேற்குறித்த மதிப்பீட்டு பிழை சரிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - இலக்கம் 09**

---

நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்புக்கள் கிரயம் அல்லது தேறக்கூடிய பெறுமதியின் தாழ்ந்த பெறுமதிக்கு கணக்கிடப்பட வேண்டிய போதிலும், பௌதீக இருப்பொன்றினை அவர்கள் கொண்டிராததுடன் 03 வருடங்களுக்கு மேலாக காலாவதியாகியிருந்த தேறக்கூடிய பெறுமதியொன்றிற்கு வருட இறுதியிலுள்ள இருப்புக்களாக ரூபா 64,973 தொகையான 03 இருப்பு மீதிகள் கணக்கிடப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 02 வாகனங்களின் திருத்தங்களுக்கான ரூபா 259,000 பட்டியல்கள் செலுத்தப்பட்டிராத அட்டுறு செலவினங்களாக பதிவு செய்யப்பட்டிராமையின் காரணமாக, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆண்டின் பற்றாக்குறை மற்றும் அட்டுறுச் செலவினங்கள் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) 03 நிலையான வைப்புக்களுடன் தொடர்புடைய மீளாய்வாண்டிற்கான ரூபா 364,095 தொகையொன்று பெறுமதியுடைய வட்டி வருமானம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தின் நடைமுறைக் கணக்கொன்றில் பெறப்பட்ட ரூபா 686,153 நேரடி அனுப்புதல்கள் பேரேட்டுக் கணக்குகளில் இனங்காணப்பட்டிருக்காததுடன் சரிப்படுத்தல்கள் துல்லியமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மொத்த சம்பளம் ரூபா 67,030 ஆகக் காணப்பட்ட போதிலும், ஊழியரொருவர்க்கான மொத்த சம்பளம் ரூபா 670,030 எனும் அடிப்படையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையான பணிக்கொடை ஏற்பாட்டின் கணிப்பீடு காரணமாக, பணிக்கொடைக்கான ரூபா 6,331,500 மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) 119 இரசாயன இருப்பு வகைகளின் இருப்பு பெறுமதி மீளாய்வாண்டிற்கான திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறுதி இருப்பாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய கணக்குகள் செலுத்தவேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 05 வருடங்கள் கணக்கீட்டுக் காலப்பகுதிக்கும் மிகையான நான்கு கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா 572,222 கூட்டுத்தொகையான பெறவேண்டிய மீதிகளினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 02 வருடங்கள் காலப்பகுதிக்கும் மிகையான நான்கு முற்பணக் கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா 321,174 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2004 ஆம் ஆண்டிலிருந்து தீர்ப்பனவு செய்யப்பட்டிராது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் ரூபா 268,724 செலுத்தப்படாத சம்பளங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) அபிவிருத்தி செயற்திட்டங்களின் பயனாளிகளுக்கு சலுகை விகிதத்தில் அரிசி நீராவி அலுமினிய உபகரணத்தின் விற்பனைக்கு கமத்தொழில் அமைச்சு பயனாளிகளிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 4,318,284 பங்களிப்புப் பணம்

தீர்ப்பனவு செய்யப்பட்டிராது 2009 ஆம் ஆண்டிலிருந்து நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்பொன்றாக பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் தீர்ப்பனவு செய்வற்கு 2018 ஆகஸ்ட் 30 வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

அட்டுறு செலவினம் முறையே ரூபா 6,458,146 மற்றும் ரூபா 5,924,468 ஆகக் காணப்பட்டமையினால், திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களுக்கிடையே ரூபா 533,678 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.5 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) 570 ஆம் இலக்க மற்றும் 571 ஆம் இலக்க நிதிப்பிரமாணம் | 2009 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியின் போது வியாபித்திருந்த ரூபா 134,500 விலை மனு வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிக்கவில்லை. |
| (ii) 756 ஆம் இலக்க நிதிப் பிரமாணம் | ரூபா 1,002,498 தொகையுடைய 6 வகையான இருப்புக்கள் தொடர்பில் வருடாந்த அளவைச் சபையின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 10 ஆம் இலக்க பந்தி | 2016 மற்றும் 2017 இல் அழிக்கப்பட்ட வாகனங்களினை அகற்றியதிலிருந்து பெறப்பட்ட ரூபா 6,057,930 காசு வருமானத்தினை மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவுவைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

ஏற்பட்ட ரூபா 107,828 செலவினத்தை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திராது மீளாய்வாண்டின் போது 10 உத்தியோகத்தர்களினால் எடுக்கப்பட்ட ரூபா 217,000 முற்பணங்களிலிருந்து தங்குமிட பற்றுச்சீட்டுக்களினை தீர்ப்பனவு செய்வதற்கு முறையானதொரு அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்ப்பனவுசெய்யப்படாத முற்பணங்களாக அது பதிவு செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் தொழிற்பாடுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 9,506,446 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 8,193,072 பற்றாக்குறையொன்றை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 1,313,374 வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. சுயமாக உழைத்த வருமானம் ரூபா 5,011,467 இனால் அதிகரித்தமை மேற்குறித்த வளர்ச்சிக்கு பிரதான காரணியாகயிருந்தது.

ஊழியர்களின் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு என்பவற்றை சரிப்படுத்திய பின்னர் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் பங்களிப்பில் வளர்ச்சியொன்று நிரூபிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் பங்களிப்பு முறையே ரூபா 97,592,080 மற்றும் ரூபா 81,224,945 ஆகக் காணப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடு மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட "Estimation of heave metal Contamination in some popular Vegetables grown in different districts of Sri Lanka" என்ற ஆராய்ச்சிக்கான இறுதி அறிக்கைகள் 2018 ஆகஸ்ட் 30 ரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2018 மார்ச்சில் பூர்த்தியாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட "Studies of wine production from locally available groups" என்ற ஆராய்ச்சிக்கான இறுதி அறிக்கைகள் 2018 யூன் 30 வரையிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிவாரி நிறுவனங்களை புலனாய்வு செய்வதற்கு கடந்த முன்னைய 04 ஆண்டுகளின் போது அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிர்வாகத்தினால் 05 பாரிய செயற்திட்டங்கள் அமுல்படுத்த கவனம்செலுத்தப்பட்டிருந்த போதிலும், பெறுகை நடைமுறைகளினைப் பின்பற்றியிராமை மற்றும் வெளிப்படையான தன்மையினை அமுல்படுத்தத்தவறியமை காரணமாக, பரிந்துரைகள் மற்றும் புலனாய்வுகளுக்கு பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் தொடர்பில், 2018 யூன் 30 வரை கமத்தொழில் அமைச்சு நடவடிக்கைகளினை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பயனாளிகளிடமிருந்து 50 சதவீதத்துடனான பகிர்ந்தளிப்புக்களுடன் நிறுவகத்திற்கு உரிமைத்துவத்தினைப் தக்கவைத்துக் கொள்ளும் உடன்படிக்கையினை ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் இலவசமாகப்

பகிர்ந்தளிக்கப்பட்ட கமத்தொழில் அமைச்சின் மூலதன மானியத்தின் கீழ் பெறப்பட்ட பணத்திற்கு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் ரூபா 16,076,078 மதிப்புடைய உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் கணக்கீட்டு நோக்கத்திற்கு மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 05 மாதங்களுக்கு மேலாக பரீட்சார்த்தரீதியான (Trial version) மென்பொருளொன்றாக நிறுவகத்தினால் பயன்படுத்தப்படுகின்ற மென்பொருளினை அனுமதிபெற்ற உத்தியோகபூர்வ மென்பொருளாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கமத்தொழில் அமைச்சின் ஒதுக்கீடுகளின் மூலம் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 07 உணவு வகைகளில் 04 கனரக உலோக கலப்படங்கள் உள்ளடங்கியுள்ளதா என மதிப்பிடுதவதற்கு அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,956,120 கிரயமொன்று நேரிட்டதன் மூலம் 500 மாதிரிகளினை பரீட்சிப்பதன் மூலம் இனங்காணப்பட்ட விளைவுகளினை கமத்தொழில் அமைச்சு மற்றும் ஏனைய அமைப்புக்களுக்கு சமர்ப்பித்திராது அறிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. ஆனால், செயற்திட்டத்தின் செலவினத்திற்கு அமைச்சிடமிருந்து ரூபா 5,350,000 மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(இ) நிறுவகத்தின் வாகனங்களின் தேவைக்கு நிறுவகத்திற்கு கமத்தொழில் அமைச்சிடமிருந்து 06 கெப் வண்டிகள் மற்றும் 01 ஜீப் வண்டி, பெறப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் பெறுகைத் திட்டத்திற்கு முரணாக மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி திருத்தத்திற்கு தனியார் துறை மோட்டார் வண்டி பழுதுபார்க்குமிடத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்கள் நிறுவகத்தின் தேவைப்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 2018 மே 30 வரை திருத்தஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆராய்ச்சிகளினை மீளாய்வதற்கு தேவையான பரிந்துரைகளினை வழங்குவதற்கு மற்றும் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட ஆய்வுகள் பூர்த்தியான பின்னர் தொழில்நுட்பத்தினை வெளியிடும் பொருட்டு செயற்படும்

ஆராய்ச்சியினை வெளியிடும் குழு மீளாய்வாண்டிற்கு குறைந்தது ஒரு தடவையேனும் கூட்டங்களினை நடாத்தியிருக்கவில்லை.

### 4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்

Gas Chromatography Mass Spectrometry System (GCMS) என்னும் பெயருடைய ரூபா 15.2 மில்லியன் மதிப்புள்ள உபகரணம் 2014 ஆம் ஆண்டின் திசெம்பரில் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் மேற்குறித்த காலப்பகுதியின் போது இந்த உபகரணத்தினை பழுதுபார்ப்பதற்காக நிறுவகத்திற்கு ரூபா 536,255 செலவினமொன்று ஏற்பட்டிருந்த அதேவேளை, ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கு பயன்படுத்தியராது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 வருடங்கள் காலப்பகுதிக்கு மேலாக விளைவற்றுக் காணப்பட்டிருந்தது.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

உரிய திகதிகளில் பட்டியல்களினை செலுத்தியராமையின் காரணமாக நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்களினை செலுத்தும் பொழுது நிறுவனத்தின் நிதியினால் ரூபா 45,532 தாமதக்கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.6 ஆளணி நிர்வாகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் II இன் 15.1(II) ஆம் பந்தி மற்றும் உத்தியோகத்தரொருவரின் சம்பள மட்டத்தினை தீர்மானிக்கையில் சம்பளத்தின் 4 ஆவது படியினை அடைவதற்கு முன்னர் வினைத்திறமைக்காண் தடைப் பரீட்சைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் ஆரம்பத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்திலுள்ள ஏதேனும் ஊழியர் வகைக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை நடாத்தப்படாமல் தகுதிகாண் காலத்திலுள்ள உத்தியோகத்தர் 03 வருடங்களுக்கு மேற்பட்ட பின்னர் உறுதிப்படுத்தல், பதவியுயர்த்துதல், வேதன அதிகரிப்பு வழங்குதல் என்பன தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளுதல்

ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டின் நிலைபேறான அபிவிருத்தி "நிகழ்ச்சிநிரலின்" பிரகாரம் அனைத்து பொதுத்துறை நிறுவகங்களும் செயற்பட வேண்டிய அதேசமயம் மீளாய்வாண்டிற்கு அவர்களின் நோக்கெல்லையின் கீழ் காணப்படுகின்ற கடமைப் பொறுப்புக்களினை செயற்படுத்தும் வழிவகை பற்றி அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களினை இனங்காண்பதன் மூலம் பயனாளிகளாக பொதுவாக இனங்காணப்பட்ட அரிசி செயன்முறையாளர்கள், கமத்தொழில் அமைப்புக்கள் மற்றும் அரசாசார்பற்ற அந்த அமைப்புக்களினூடாக அந்த அமைப்புக்களுடன் விபரிக்கப்பட்ட பங்கேற்பு ரீதியான அணுகுமுறையொன்றினூடாக குறித்துரைக்கப்பட்ட அமைப்புக்கள் இனங்காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த செயன்முறை

#### 6.1.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாம்பழ விநியோக பெறுமதிச் சங்கிலி முகாமைத்துவ செயற்பாடுகள் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு பொதியிடல் பெட்டிகளினை வடிவமைத்தல் மற்றும் விநியோகத்திற்கு விலைமனுவினை மதிப்பிடுகையில் போக்குவரத்து செலவினங்களினை புறக்கணித்து அலகு விலையினை மாத்திரம் கருத்திற்கொண்டு குறைந்த விலையுடைய விலைமனுதார்க்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதிலிருந்து ஒப்பந்த விலையினை மிகைத்து ரூபா 63,673 இனை நிறுவகம் செலுத்தியிருந்தது.

(ஆ) பப்பாசி விநியோக பெறுமதிச் சங்கிலி முகாமைத்துவச் செயற்பாடுகள் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு விலைமனுவினை அழைக்கையில் ஒரு வாரத்திற்குள் 4,000 பொதியிடல் பெட்டிகளின் வடிவமைப்பு மற்றும்

விநியோகத்தின் நிபந்தனையொன்று உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், 4 வாரங்கள் காலத்தினுள் விநியோகிக்கும் முதல் தகுதியான குறைந்தளவான விலையினையுடைய விலைமனுதாரினை நிறுவகம் நிராகரித்திருந்ததுடன் அதற்கு அடுத்த குறைந்தளவான விலையினையுடைய விலைமனுதாரர்க்கு அளித்திருந்தது. முதலாவது தகுதியையுடைய தாழ்ந்த விலையுடைய விலைமனுதாரரினை நிராகரித்தமை மற்றும் அடுத்த தாழ்ந்த விலையுடைய மனுதாரர் விநியோகத்திற்கு 2 மாதங்கள் காலம் எடுத்திருந்தமை காரணமாக நிறுவகம் ரூபா 801,760 நட்டமொன்றை தாங்கிக்கொண்டது.

(இ) பெறுகை வழிகாட்டலின் 2.14.1 ஆம் பந்தியின் பிரகாரம் வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் கட்டிடங்களினைப் பெற்றுக் கொள்ளும் போது முழுமையான குத்தகை பிரகாரம் குத்தகை தொகைக்கு பெறுகை எவ்லையினை தீர்மானிக்கையில் அது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய போதிலும், 5 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கு ரூபா 28.5 மில்லியன் குத்தகைத் தொகைக்கு பெறுகை எல்லையினை தீர்மானிக்கையில் அமைச்சரவை பெறுகைக் குழு கவனஞ்செலுத்தவேண்டிய போதிலும் கொழும்பு அலுவலகத்திற்கு வாடகை அடிப்படையில் கட்டிடமொன்றினைப் பெற்றுக்கொள்வற்கு வழிகாட்டிய பணிப்பாளர் சபையின் பெறுகைத் தீர்மானத்தினை மீறி 1 வருடம் மற்றும் 6 மாதங்கள் காலப்பகுதியொன்றிற்கு ரூபா 8.5 மில்லியனுக்கு வாடகை அடிப்படையில் கட்டிடமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு சிறிய திணைக்கள விலைமனுச் சபை தீர்மானித்திருந்தது.

## 6.2 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2010 ஆகஸ்ட் 19 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழு கூட்டத்தின் பிரகாரம், நிறுவகம் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் தரமுடையனவாகவும் தொழில்சார் மட்டத்தில் அமைந்ததாகவும் இருப்பதை உறுதி செய்வதற்கு, நிறுவகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி ஆலோசனை குழு ஒரு ஆண்டில் குறைந்தது 4 தடவைகளாவது கூட்டங்களை நடாத்தி ஆராய்ச்சிகளுக்கான முன்மொழிவுகளை வழங்கி செயல் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யவும் வேண்டும் என பணிப்புரை வழங்கப்பட்டது. ஆனால் மீளாய்வாண்டிற்குரிய 15 ஆராய்ச்சி தொடர்பாக மதிப்பீடு செய்வதற்காக மீளாய்வாண்டில் ஆராய்ச்சி ஆலோசனை குழு குறைந்தது ஒரு தடவையேனும் கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை.

7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) ஆராய்ச்சிக் கட்டுப்பாடு | (i) நிறுவகதினால் செயற்படுத்தப்பட்ட ஆராய்ச்சியின் மீது ஆராய்ச்சி வழிகாட்டல்களின் உறுப்புரைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) ஆராய்ச்சி ஆலோசனை சபையிடமிருந்து அறிவுறுத்தல்கள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) ஆளணி நிர்வாகம் | (i) நிறுவகத்தின் ஆளணியினர் தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு சமூகமளித்திருக்கவில்லை. |
| | (ii) வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளினை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) ஆய்வுகூடக் கட்டுப்பாடு | (i) நிறுவகத்தின் ஆய்வுகூடம் தரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) ஆய்வுகூட உபகரணம் வினைத்திறனாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

(iii) ஆய்வுகூட இருப்புக்களுக்கு இருப்புக் கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விடுதிக் கட்டுப்பாடு

தொடர்ச்சியானதொரு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினைப் பயன்படுத்தி விடுதி வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி